Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 27 வியாழக்கிழமை (12.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 329

## இளைஞர்களே!
### சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
## அரச காணிகளுக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)
அரச காணிகளில் முதலீடு செய்து இலாபம் பெறுவதற்கு இளைஞர்களுக்கு ஓர் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
இளம் தொழில் 19

## கொரோனா பரவல் உச்சம்;
### 15 ஆயிரத்தை கடந்த தொற்றாளர்கள்
### நேற்று மட்டும் + 635 பேர் பாதிப்பு

(கொழும்பு)
நாட்டில் நேற்று மட்டும் 635 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டவர்கள் அனைவரும் ஏற்கெனவே தொற்று கண்டறியப் பட்டவர்களுடன் தொடர்பில் இருந்த வர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா 19

## 30 ஆயிரம் பேருக்கு
# கொழும்பில் கொரோனா தொற்றும் அபாயம்

(கொழும்பு)
கொழும்பு நகர சபை பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆறு இலட்சம் அளவிலான மக்களுள் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை 30 ஆயிரமாக உயர்வடைய வாய்ப்புள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார மருத்துவர் ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட 400 பி.சி.ஆர் பரிசோதனையில் 19 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனாவுக்கு நேற்றும் 5 பேர் உயிரிழப்பு
### மொத்த பலி 46 ஆக உயர்வு

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 5 பேர் நேற்றும் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் இலங்கையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46 ஆக அதிகரித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## போகம்பரை சிறையில்
### 23 கைதிகளுக்கு கொரோனா

(கொழும்பு)
போகம்பரை சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்ட மையத்தில் 23 விளக்கமறியல் கைதிகளிற்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களால் விளக்க மறியலில் வைக்கப்பட்ட பின்னர் போகம்பரை தனிமைப்படுத் தப்பட்ட மையத்திற்கு அனுப்பப்பட்டதாக கூறப்படுகிறது.

முன்னதாக, போகம்பரை சிறைச்சாலையின் இரண்டு காவலர்கள் மற்றும் ஏழு கைதிகள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டது.

பின்னர் அவர்கள் தெல்தெனிய கொரோனா 19

### கொரோனா அபாய பகுதியான
## மேல் மாகாணத்தை விட்டு மக்கள் வெளியேறத் தடை
### ஜனாதிபதி கோட்டாபய உத்தரவு



(கொழும்பு)
கொரோனா தொற்றாளர்கள் பெருமளவில் கண்டறியப்பட்டுவரும் மேல் மாகாணத்தை விட்டு மக்கள் வெளியேறுவதைத் தடுப்பதற்கு நடவடிக் கைகளை 19

### அமெரிக்காவின் விருப்பங்கள்
## இலங்கை மீது திணிக்கப்படாது
### அமெரிக்க தூதுவர் அலெய்னா



09ஆம் பக்கம் பார்க்க

## விசுவமடுவில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தின புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடு இளங்கோபுரத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த 19

### ஒத்த கருத்துக்கள் இருப்பின்
## தமிழ்க் கட்சிகளுடன் ஒன்றுசேர வாய்ப்புண்டு
### பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன்

03ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் ஒருவருக்கு கொரோனா உறுதி
### கொழும்பிலிருந்து வீடு திரும்பியவர்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்றுப் புதன்கிழமை 347 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அவர்களில் கிளிநொச்சி கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் சோமலிங்கம்

(காரைநகர் சோமு)

அன்னை மடியில் : 16.12.1942
ஆண்டவன் அடியில் : 11.11.2020



காரைநகர், களபூமி, தன்னையைப் பிறப்பிடமாகவும் கணவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சோமலிங்கம் நேற்று (11.11.2020) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சுந்தரம்மா தம்பதியினரின் அன்பு மகனும் சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கெங்கேஸ்வரி மற்றும் காண்டீபராசா, பார்த்தீபராசா, தனஞ்சயன், பற்குணன், விஜயரூபன் ஆகியோரின் பாசமிகு. தந்தையும் சுகந்தி, மோகனா, வரலட்சுமி, கஜலட்சுமி, சுகன்யா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற கனகேஸ்வரி மற்றும் இந்திராணி, விஜயலட்சுமி, புனிதவதி, புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கார்த்திகா, மயூரதி, லதுர்சன், டிலக்சி, டிஷானி, காவியவர்ஷினி, கிஷானி, விதுஷி, சோபி, விதுரா, அருண், தருண் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2020) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4628)

கணவோடை, களபூமி,
காரைநகர்.

077 364 4067

தகவல்:-
குடும்பத்தினர்

# யாழில் பல்வேறு கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய 5 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பல்வேறு திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 5 இளைஞர்களை கோப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், கோப்பாய், சுன்னாகம், மல்லாகம் பகுதிகளில் அண்மையில் பல்வேறு திருட்டு மற்றும் கொள்ளை சம்பவங்கள் இடம்பெற்றன.

திருட்டு மற்றும் கொள்ளை சம்பவங்களில் நகைகள், பணம், இலத்திரனியல் உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டுள்ளன. இந்த திருட்டு மற்றும் கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நல்லூர், கோப்பாய், மல்லாகம், யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 5 இளைஞர்களை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட அனைவரிடமும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் திருட்டு மற்றும் கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய இந்த ஐந்து பேரையும் விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-101)

### தனிமைப்படுத்தலை நிறைவு செய்தவுடன்

# வீடு திரும்ப முன்னரே மது அருந்திய குழுவினர்

(கொழும்பு)

கந்தகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து சென்ற குழுவொன்று பேருந்தை நிறுத்திவிட்டு மதுபானம் அருந்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தனிமைப்படுத்தலை நிறைவு செய்துவிட்டு மீண்டும் வீடு நோக்கி சென்ற குழுவினரே இவ்வாறு செயற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நபர்கள் கம்பஹாவை நோக்கி பயணித்த பேருந்தை இடையில் நிறுத்திவிட்டு மதுபான விருந்து ஒன்றை நடத்தியுள்ளதாக கம்பஹா மாவட்ட பிரதேச சுகாதார சேவை இயக்குனர் மிகார ஏபா தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் குடிபோதையில் இருந்த குழுவினர் பேருந்திற்கு குழப்பம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரி, இராணுவத்தினர் மற்றும் கம்பஹா மாவட்ட செயலாளரிடம் அறிவித்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 04 . 07 . 1926



உதிர்வு 13 . 10 . 2020

அமரர்

## கதிர்காமு நீலப்பிள்ளை

(நாவற்காடு, வரணி)

கடந்த 13.10.2020 அன்று எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுச்செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி, சமூகவலைத்தளங்கள் மூலமாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (12.11.2020) வியாழக்கிழமை அன்னாரது சொந்த இடமான நாவற்காடு, வரணியில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அவர்தம் ஆத்ம சாந்திக்காக ஆண்டவன் திருவடியைக் கண்ணீர்ப்பூக்களால் அர்ச்சித்து கசிந்துருகிப் பிரார்த்திக்கின்றோம்.

நாவற்காடு,
வரணி.

குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில் 13.02.1943

ஆண்டவன் அடியில் 10.11.2020

எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தாபக உறுப்பினர்களில் ஒருவரும் இல்ல நிர்வாக கட்டமைப்பின் காப்பாளரும் இல்லத்தின் ஆரம்பம் தொடக்கம் குழந்தைகளின் நலனுக்காகவும் இல்லத்தின் வளர்ச்சிக்காகவும் அயராது தன்னலமற்ற சேவையாற்றியவருமான

அமரர்

## செல்லையா செல்வரத்தினம்

அவர்கள் 10.11.2020 அன்று இறைவனடி சேர்ந்தமையினையிட்டு ஆறாத்துயரடைகின்றோம்.

**" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் "**

என்னும் வாக்கிற்கிணங்க அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைஅருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


(C-668)

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
இல்லக் குழந்தைகள்.

# தமிழ்க்கட்சிகள் கூட்டுச்சேர்வதை பேசித்தான் தீர்மானிக்கலாம்

## நீதியரசர் விக்னேஸ்வரன் தெளிவுபடுத்தல்

**த (யாழ்ப்பாணம்) ம்மை விடக்கெட்டிக்காரர் இவ்வுலகத்தில் யாருமில்லை என்று சிந்திப்பவர்கள் ஒற்றுமையை வளர விடமாட்டார்கள். தாம் கூறுவதை மற்றவர்கள் முழுமையாக ஏற்க வேண்டும் என்றே எதிர்பார்ப்பார்கள். அத்தகையவர்களுடன் எவ்வாறு கூட்டுச்சேரலாம் என்பதைப் பேசித்தான் நாம் ஒரு முடிவுக்கு வரமுடியும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய கேள்வி பதிலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கேள்வி பதில் பின்வருமாறு.

**கேள்வி:-** நீங்கள் உள்ளதை உள்ளபடி மறைக்காமல் சொல்லும் வல்லமையுடையவர். உண்மையைச் சொல்லுங்கள் - தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று சேரும் வாய்ப்புண்டா? ஆம் எனில் எவ்வாறு, எப்போது, இல்லையேல் அதற்கென்ன காரணம்?

**பதில்:-** தறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாக கட்சியினரிடையே ஒத்த கருத்திருப்பின் அதன் பொருட்டு அவர்கள் ஒன்று சேரும் வாய்ப்பு கட்டாயமாக இருக்கின்றது. ஆனால் நிறுவனமயப்படுத்திப் பயணிப்பதற்குத் தடையாக இருக்கக்கூடியவை சுயநலமும் அகந்தையும் ஆவன. நாம் ஒவ்வொருவரும் எமது கட்சிகளை மட்டும் மேம்படுத்த சுயநலத்துடனும் அகந்தையுடனும் உளங்கொண்டிருந்தால் ஒற்றுமை சாத்தியப்படாது.

அதனால் எமது மக்கள் பாதிக்கப்படக்கூடும். ஒன்று சேருவது பற்றி நாங்கள் பேசிக் கொள்வது மக்கள் கோரிக்கையின் நிமித்தமே. அவர்களின் நன்மை கருதியே. மக்கள் தான் ஒற்றுமையை வேண்டி நிற்கின்றார்கள்.

ஒவ்வொருவருக்கும் கட்சி நலம் மேலோங்கினால் குறிப்பிட்ட விடய ரீதியான ஒற்றுமை வேண்டும் போது ஏற்படலாம், ஆனால் அவர்களிடையே நிறுவனமயமான ஒன்றிணைந்த பயணத்தை ஏற்படுத்துவது சிரமமாக இருக்கும்.

ஒவ்வொருவரும் புதிய நிறுவனத்தில் தமக்கென ஒரு முக்கிய இடத்தை வகிக்க முனைவார்கள். புதிய நிறுவனத்தைத் தமக்குச் சார்பாகப் பயணிக்க வைக்க முனைவார்கள்.

பல கட்சிகள் நிறுவன ரீதியாக ஒன்றிணைய வேண்டுமானால் 3 முக்கிய விடயங்கள் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். தலைமைத்துவம், கொள்கைகள், நிறுவன செயற்பாடுகள் ஆகியனவாகும்.

தலைமைத்துவம் எனும் போது தலைவரானவர் அறிவு, ஆற்றல், அனுபவம் கொண்டவராகவும் முக்கியமாக அகந்தை அற்றவராகவும் இருக்க வேண்டும்.

அப்பொழுது தான் அவர் மக்கள் நலனைப் பற்றிச் சிந்திப்பார். இல்லையேல் தன்னலம் பற்றியும் தன் கட்சி நலம் பற்றியுமே சிந்திப்பார்.

என் கருத்துப்படி சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவே இவ்வாறான கூட்டுக் கட்சியொன்றின் தலைமைத்துவத்திற்குப் பொருத்தமானவர். அவரிடம் மேற்கண்ட குணாதிசயங்கள் எல்லாம் கிட்டத்தட்ட இருக்கின்றன.

எனினும் பல மக்களிடையே அவர் பற்றி ஒரு எதிர்மறையான கருத்து இருப்பதை நான் அறிவேன். அதாவது குற்றஞ் செய்தவர்களுக்காக நீதிமன்றங்களில் தெரிபட்டு அவர்களை விடுவிக்க அல்லது அவர்கள் விடுதலை வாங்க அவர் உதவி வருகின்றார் என்ற முறைப்பாடே அது.

இரண்டு விடயங்கள் இது பற்றி கருத்தில் எடுக்க வேண்டும். ஒன்று கண்ணால் காண்பதும் காதால் கேட்பதும் உண்மையென்று கூற முடியாது. தீர விசாரித்தே உண்மையை அறிய வேண்டும்.

இரண்டாவது இறைவன் முன்னிலையில் எது உண்மையோ அது தான் சட்டத்தின் முன்பும் உண்மையாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கக்கூடாது. பல கட்டுப்பாடுகள், சட்டக் கொள்கைகளின் அடிப்படையில் எமது சான்றுச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றிற்கு அமைவாக ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டால்தான் அவரைக் குற்றம் செய்தவர் என்று சட்டம் ஏற்கும். இல்லையேல் விடுதலை செய்துவிடும்.

ஆகவே சட்டத்திற்கு அமைவாகத்தான் குற்றவாளிகளை அடையாளம் காண்கின்றோம்.

சட்டத்திற்கு அமைவாக ஒருவரைக் குற்றவாளியாகக் காண முடியாத இடத்து எதிரி விடுதலை செய்யப்படுகின்றான். உண்மையை அறிந்த மக்கள் ஏமாற்றமும் ஆத்திரமும் அடைகின்றனர்.

அண்மையில் இதுவரை காலமும் பல கட்சியினரையும் ஒன்று சேர்க்க உதவி புரிந்தவர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவே.

மேலும் மாவை போன்ற ஒரு முக்கிய கட்சியின் தலைவர் கூட்டுக்கும் தலைமை வகித்தால் சிறிய கட்சிகள் வலு இழந்துவிடுவன. முக்கிய கட்சியின் கையே ஓங்கும்.

அதன் செல்வாக்கே செல்லுபடியாகும். ஆனால் சிறிய கட்சியின் தலைவர்கள் கூட்டுக்குத் தலைமை வகித்தால் பெரிய கட்சிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

சிறிய கட்சிகளும் அடையாளம் பெறுவன. மாவை எனது பல வருடகால நண்பர். அவரை விடுத்து ஸ்ரீயை நான் சிபார்சு செய்வது நீண்டகால ஒற்றுமை கருதியும் மக்களின் நலன்கருதியும்.

சம்பந்தன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் கூட்டமைப்பின் தலைவராகவும் இருந்ததையும் எவ்வாறு சிறு கட்சிகள் அவரால் புறக்கணிக்கப்பட்டன என்பது பற்றியும் யாவரும் அறிவர்.

அடுத்து கொள்கைகள் எனும் போது சில அடிப்படை விடயங்கள் கட்சித் தலைவர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். தேசியம் என்பது வெறும் பேசுபொருள் அல்ல. 1987 ஆம் ஆண்டின் இந்திய- இலங்கை உடன்பாட்டில் இலங்கைத் தீவின் வடக்கு- கிழக்கு மாகாணங்கள் பாரம்பரிய தமிழர் வாழ் இடங்கள் என்றும் அவர்களின் தாயகம் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கு மாறாகக் கருத்துக்களை நாம் வெளியிடுவது அடிப்படைக் கொள்கைகளில் இருந்து விலகுவதாக அமையும்.

ஆகவே வடக்கு- கிழக்கு இணைப்பும் அம் மாகாணங்கள் இரண்டும் பாரம்பரியமாகத் தமிழ்மொழி பேசும் மாகாணங்கள் என்பதும் எல்லாக் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேலும் அம் மாகாண மக்கள் கூட்டாகச் சர்வதேசச் சட்டப்படி தன்னாட்சிக்கு உரித்துடையவர்கள் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

ஒற்றையாட்சியின் கீழ் எமது தன்னாட்சி சாத்தியமற்றது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒற்றையாட்சி வேறு, ஒன்றிணைந்து ஐக்கியப்படுவதால் ஏற்படும் ஆட்சிவேறு என்பதன் அர்த்தத்தையும் புரிந்து நாம் செயலாற்ற வேண்டும். இவற்றையெல்லாம் பத்துக் கட்சிகளும் புரிந்துகொண்டு ஏற்று நடக்க உடன்பட்டால்தான் கூட்டுக்கட்சி உருவாகலாம்.

மூன்றாவது நிறுவனமயப்படுத்தல் பற்றியது. எல்லோரும் தலைமைத்துவத்தைத் தாமே ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆகவே ஒரு தக்க தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் கட்சிகள் ஒன்றுபட்டு ஒரு ஒன்றிணைந்த கூட்டை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதைக் கட்சித் தலைவர்கள் பேசி முடிவெடுக்க வேண்டும்.

ஐந்து கட்சிகள் சேர்ந்து எழுத்து மூல உடன்பாட்டின் அடிப்படையில்தான் எமது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி பயணிக்கின்றது. அதைப் போல் ஒவ்வொரு கட்சியும் தனது தனிமைத்துவத்தைப் பேணும் அதேநேரம் உடன்படிக்கையின் அடிப்படையில் எவ்வாறு நிறுவன ரீதியாகப் பயணிக்கலாம் என்பதைக் கலந்தாலோசித்து முடிவு எடுக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# மேலைத்தேசத்தில் சைவசமயத்தை மேலோங்கச் செய்த சிவாயசுப்பிரமுனிய சுவாமிகள்

## இன்று குருபூசை தினம்



யாழ்ப்பாணக் குடாநாடு சித்தர்கள், ஞானிகள், யோகியர் என்ற வகையில் ஒரு ஞான பரம்பரையை தோற்றுவித்த பெருமைக்குரியது. இந்த ஞான பரம்பரையில் ஒருவராக தோற்றம் பெற்றவர்தான் தவத்திரு சிவயோகசுவாமிகள். இவர் யாழ்ப்பாணத்து மாமுனிவர் என அடியார்களால் போற்றப்பட்டு வந்தவர். இவரது சமாதிக் கோயிலும் ஆச்சிரமும் யாழ். கொழும்புத்துறை கிராமத்தில் அமைந்திருப்பதுடன்,அங்கு இன்றும் பூசை வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஒரு சீடர் பரம்பரையை உருவாக்கிய பெருமை சிவயோகசுவாமிகளுக்கு உண்டு. இவரது அருள் பெற்ற ஞானியர் பரம்பரையில் உள்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, மேலை நாடுகளைச் சேர்ந்த பிற இனத்தவர்களும் அடங்குகிறார்கள். இவர்களுள் ஒருவராக சிறப்பித்துச் சொல்லப்படுபவர் தான் அமெரிக்காவைச் சேர்ந்த தவத்திரு சிவாயசுப்பிரமுனிய சுவாமிகள்.

சிவயோக சுவாமிகளின் மகிமையை கேள்வியுற்ற இருபத்தியொரு வயது அமெரிக்க இளைஞர் ஒருவர் 1949 ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்தார். யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அந்த அமெரிக்க இளைஞர், வைகாசி விசாக நன்நாளன்று சிவயோக சுவாமிகளை சந்தித்தார். மக்களோடு மக்களாக சாதாரண நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் ஒருசிலர் இறைவனால் ஆட்கொள்ளப்படுவதால், இறையுணர்வு கைவரப்பெற்ற அனுபூதிமான்களாக மாறி விடுகிறார்கள். இந்த வகையிலேயே அந்த அமெரிக்க இளைஞரும் சிவயோக சுவாமிகளின் சந்திப்புக்குப் பின் இறைபக்குவ நிலைபெற்று அவரது சீடரானார்.

சிவயோக சுவாமிகள் மேற்படி அமெரிக்க இளைஞருடனான முதலாவது சந்திப்பின் போது பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசம் செய்து, வாழ்வின் பணிகள் குறித்து அறிவுரைகளையும் வழங்கி, 'சுப்பிரமுனிய' எனும் நாமாகரண தீட்சையையும் கொடுத்தது மட்டுமல்ல, இளைஞரின் முதுகில் பலமாக ஓங்கி அடித்து,"இந்த அடி அமெரிக்காவிலே கேட்கும்! இனி உலகெங்கும் சென்று சிங்கம்போல் கர்ச்சிப்பாய்! நீ பல ஆலயங்களை அமைத்து பலருக்கு உணவளிப்பாய்!" என ஆசி வழங்கி அனுப்பி வைத்தார். அன்று முதலாக அந்த அமெரிக்க இளைஞர் சுப்பிரமுனிய சுவாமிகள் என அடியார்களால் அழைக்கப்பட்டு போற்றப்பட்டார்.

சுப்பிரமுனிய சுவாமிகள் சிலகாலம் யாழ். குடாநாட்டில் தங்கியிருந்த போது, சிவயோக சுவாமிகளின் ஆசியுடன், அளவெட்டி கிராமத்தில் ஆச்சிரமமொன்றையும், பசுபதீஸ்வரர் ஆலயத்தையும் ஸ்தாபித்தார். இன்று உலகளாவிய ரீதியில் சேவையாற்றி வரும் சைவசித்தாந்த தர்மசபை அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில்தான் ஆரம்பமாகியிருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இலங்கையிலிருந்து அமெரிக்கா திரும்பிய சுப்பிரமுனிய சுவாமிகள், அங்கு செய்ய வேண்டிய ஆன்மிகப் பணிகளுக்கு தன்னை ஆயத்தமாக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டார். 1957 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில் இமாலயக்லாபீடத்தை நிறுவியதுடன், மேலைத்தேசத்தின் முதலாவது இந்துக் கோவிலையும் ஸ்தாபித்தார். 1970 ஆம் ஆண்டு, அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் ஒன்றான குவை எனும் தீவில் புனித வைலுவ நதிக்கரையிலுள்ள பெரும் நிலப்பரப்பில் சைவ ஆதீனத்தை நிறுவினார். இங்கு ஆறு அடி உயரமான நடராஜப் பெருமானை மூல மூர்த்தியாகக் கொண்ட ஆலயத்தையும் அமைத்தார்.

1975 ஆம் ஆண்டு மாசி மாதம் சிவ பெருமான் சுப்பிர்முனிய சுவாமிகளுக்கு ஓர் அகக்காட்சியை அருளினார். இதன்படி புனித வைலுவ நதிக்கரையில் சுயம்பு லிங்கமொன்றைக் கண்டார்.

சுப்பிரமுனிய சுவாமிகள் 1979 ஆம் ஆண்டு ஹின்டுசியம் ருடே (Hinduism Today) என்ற பெயரிலான சஞ்சிகையொன்றை ஆரம்பித்து வைத்தார். ஹவாய் சைவ ஆதீன வெளியீடான இந்த சஞ்சிகை சர்வதேச ரீதியில் இந்துக்களின் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. இந்து சமயம் சார்ந்த பல நூல்களையும் சுவாமிகள் எழுதியிருக்கிறார்.

சுப்பிரமுனிய சுவாமிகள் தனது சமய, சமூகநலப் பணிகளின் மற்றொரு செயற்பாடாக இந்து கலாசார அறக்கட்டளையை உருவாக்கி, அதனூடாக உலகளாவிய ரீதியில் ஆதரவற்றோர் மற்றும் முதியோருக்கான இல்லங்கள், சமய நிறுவனங்கள் போன்றவற்றுக்கு உதவி வந்துள்ளார். இந்த அறக்கட்டளை ஊடான மேலான பணிகள் ஹவாய் சைவ ஆதீனத்தால் இப்போதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1986 ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற உலக சமய பாராளுமன்ற நிகழ்வின் போது, சுவாமிகளது உலகளாவிய சமய சமூகப் பணிகளைப் பாராட்டி 'ஜகதாச்சாரியார்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2000 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் யூதாண்ட் (முன்னாள் செயலாளர் நாயகம்) ஞாபகார்த்த சமாதான விருது வழங்கப்பட்டதுடன், ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டில்கலந்து கொண்டு உரையாற்றுவதற்கும் சுவாமிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

சுப்பிரமுனிய சுவாமிகள் 2001 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் திகதியன்று நள்ளிரவு சித்திரை நட்சத்திரத்தில் மகா சமாதியடைந்தார்.

-ரிஷி தொண்டுநாதன்.

## திருத்தப் பணிகளுக்காக மூடப்படும் ரயில் பாதை

(கொழும்பு)

கடலோர ரயில் பாதையின் ஒரு வழித் தடத்தை தற்காலிகமாக மூட ரயில்வே கட்டுப்பாட்டுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, நேற்று, இன்று மற்றும் நாளை கரையோர மார்க்கத்தின் பாணந்துறை வரையிலான ஒருவழித் தடம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொள்ளுப்பிட்டியிலிருந்து பம்பலப்பிட்டி வரையான ரயில் பாதையில் மேற்கொள்ளப்படவுள்ள அவசரத் திருத்தப்பணிகளுக்காக இந்த ஒரு வழித் தடம் மூடப்பட்டிருக்கும் என ரயில்வே கட்டுப்பாட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக அந்தப் பகுதிக்கான பல ரயில் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் கொழும்பு கோட்டை முதல் பாணந்துறை வரையில் விசேட பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## பவித்ராவின் பதவி பறிபோகுமா?



(கொழும்பு)

சுகாதார அமைச்சர் பதவியில் இருந்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நீக்கப்படவுள்ளதாகவும் அத்துடன் சுகாதார அமைச்சர் பதவிக்கு பலரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொரோனா வைரஸ் ஒழிப்பு திருப்தி ஏற்படும் வகையில் இல்லாமை, மக்களின் நம்பிக்கை வீழ்ந்துள்ளமை என்பன அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மீதுள்ள விமர்சனங்களாகும்.

இருப்பினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எம்.பி சீத்தா அரம்பேபொலவை பரிந்துரை செய்துள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோ புள்ளேயை பரிந்துரை செய்துள்ளதாகவும் உள்ளகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.(ஜ-4)

## கட்டுப்பாட்டு பகுதிகளில் இருந்தும் ஊழியர்களை அழைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வதற்கு கடுமையான பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து ஊழியர்களை பணிக்கு அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன அறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 வைரஸை கட்டுப்படுத்தும் நோக்கில் நாட்டில் சில பகுதிகளில் கடுமையான பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்டுப்பாடுகள், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் நாளாந்த பொதுமக்கள் வாழ்க்கையை முன்னெடுப்பதற்கான அவசியமான ஊழியர்கள் மற்றும் அத்தியாவசியமான சேவைகளுக்கான ஊழியர்களுக்கு பொருந்தாது.

இதனை தவிர்த்து ஏனைய ஊழியர்களை பணிக்கு அவசியமான சந்தர்ப்பத்தில் அழைப்பதாக இருப்பின், அது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள 0117966366 என்ற தொலைபேசி இலக்கத்தினை தொடர்பு கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

## கைதி மரணம்

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை, அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்குள் கைதி ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார். சிறைக் கைதிகள் இடையே கொரோனா வைரஸ் பரவி வரும் நிலையில் இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது இளைஞனே மேற்படி மரணித்த நிலையில், சடலம் பி.சி.ஆர்.. உட்பட மேலதிக விசாரணை மற்றும் பரிசோதனைக்காக அங்குனுகொலபெலஸ்ஸ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## திருகோணமலை தொற்று 14 ஆக உயர்வு

(திருமலை)

திருகோணமலை வைத்தியசாலையில் மேலும் ஒரு வைத்தியர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை அடையாளம்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையானது 14 ஆக காணப்படுவதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (நி-4)



லயன் சுந்தரலிங்கத்தின் அனுசரணையில் அமைக்கப்பட்ட சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முகப்புக் கொட்டகைத் திறப்பு விழா நேற்று புதன்கிழமை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டயாலினி மகேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

# பட்டினிச்சாவு ஏற்படும் அபாயம்

(முல்லைத்தீவு)

அண்மைக் காலமாக முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் வருகை அதிகரித்துள்ளமையால் கடல்வளங்கள் அழிக்கப்படுவதுடன், முல்லைத்தீவு மீனவர்களின் வாழ்வாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந் நிலை தொடருமானால் எமது மீனவர்கள் பட்டினிச் சாவு ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் ஜோன்சன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே உரிய அதிகாரிகளும் அரசாங்கமும் இவ்விடயத்தினைக்கவனத்தில் எடுத்து. இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையினைத் தடைசெய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசாங்கமும் விரைவில் இப் பிரச்சினைக்கு உரிய



தீர்வினைப் பெற்றுத்தரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# பிக்கப்-மோ.சைக்கிள் விபத்து காயமடைந்தவர் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -மீசாலைப் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற பிக்கப்-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதில் மீசாலை மேற்குப் பகுதியைச் சேர்ந்த கா.பரஞ்சோதி என்பவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

# "பசுமையான யாழ்" மர நடுகைத் திட்டம்

(குப்பிழான்)

"விதையனைத்தும் விருட்சமே" இளைஞரணி தெல்லிப்பழை அம்பனைப் பகுதி உறவுகளின் அனுசரணையுடன் "பசுமையான யாழ்" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கும் மரம் நடும் செயற்றிட்டம் முதற்கட்டமாக இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி முன்றலில் ஆரம்பிக்கப்படும்

மேற்படி சூழல் நேயப் பணியில் சமூக ஆர்வலர்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு "விதையனைத்தும் விருட்சமே" இளைஞரணியினர் அழைப்பு விடுத்துள்ளனர். (5-4-18)

# வேட்பாளர்களுக்கான வயதெல்லை அதிகரிப்பு?

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தல் மற்றும் ஏனைய தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அதிகூடிய வயதெல்லை 55 ஆக நிர்ணயிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் இந்த யோசனை உள்வாங்கப்படலாம் என அரசாங்கத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தகுதி பெறும் குறைந்த வயதெல்லையாக இருந்த 30 வயது, 36 ஆக மாற்றப்பட்டது.

இருப்பினும் 20 ஆவது திருத்தத்தை கொண்டுவந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அந்த வயதெல்லையை மீண்டும் 30 ஆக மாற்றினார்.

எனினும் தற்போதைய அரசியலமைப்பில் அதிகூடிய வயதெல்லை என்ன என்று குறிப்பிட்டிருக்கவில்லை.

இந்நிலையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் அரசாங்கம் கருத்து வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)



# பயிர்ச் செய்கைக்கு விதைகள் வழங்கி வைப்பு



(சாவகச்சேரி)

வீட்டுப் பொருளாதார போசணையை மேம்படுத்தி குடும்ப அலகுகளை வலுவூட்டுவதற்கான தேசிய வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிர்ச் செய்கைக்கான விதைகள் வழங்கும் நிகழ்வு தென்மராட்சிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கொடிகாமம் மத்தி ஜே/327 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கான விதைகள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர் கனகரத்தினம் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரின் இணைப்பாளர் ம.கோகுலன், கிராம உத்தியோகத்தர் நிஷாந்தன், கமநலசேவை நிலைய உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான விதைகளை வழங்கி வைத்தனர்.

குறித்த செயற்றிட்டத்தின் கீழ் அண்மையில் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (5-4-30)

# முடக்கல் நிலை நீக்கப்பட்டாலும் சுகாதார நடைமுறைகளைத் தொடரவும்

## யாழ்.அரச அதிபர்



(யாழ்ப்பாணம்)

முடக்கல் நிலை நீக்கப்பட்டாலும் குறித்த பகுதி மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்படுவது அவசியம் என யாழ்.மாவட்ட அரச அதிபரும் மாவட்ட கொரோனா ஒழிப்பு செயலணியின் தலைவருமான க.மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை யாழ் . மாவட்டத்தில் மூன்று கிராமங்கள் தனிமைப்படுத்தலிருந்து விடுவிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கொரோனா அச்சம் காரணமாக முடக்கப்ப்ட்டிருந்த மூன்று கிராமங்கள் நேற்றுக் காலை முடக்கல் நிலையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ள அரசாங்க அதிபர், குறித்த பகுதி மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சமூக இடைவெளியினைக் கடைப்பிடித்து தமது அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் அவசியமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேல் மாகாணம் மற்றும் ஏன்னய மாவட்டங்களில் கொரோனாத் தொற்று வலுவடைந்து வரும் நிலை காணப்படுவதாகவும், தற்பொழுது யாழ்.மாவட்டத்தில் சுகாதாரப் பிரிவினரால் முடக்கப்பட்ட பிரதேசங்கள் முடக்க நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் கிருமித்தொற்று அச்சம் தொடர்ந்து காணப்படுகின்றது.

எனவே குறித்த பகுதி மக்கள் சுகாதார நடைமுறைகளைச் சரியான முறையில் பின்பற்றுவதன் மூலமே குறித்த பகுதியிலோ அல்லது வேறு பகுதியிலோ தொற்று ஏற்படாத்வாறு பாதுகாக்க முடியும்.

மேல் மாகாணத்திலிருந்தோ அல்லது ஏற்கனவே கொரோனா பாதிப்புள்ள அபாய வலயங்களிலிருந்து புதியவர்கள் யாரும் வடக்கிற்கு வருகை தந்தால் அவர்கள் கட்டாயமாக சுகாதாரப் பிரிவினரிடம் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-33)

# நகரசபை பாதீட்டு முன்மொழிவு வெற்றி

(கரணவாய்)

பருத்தித்துறை நகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவு ஒரு மேலதிக வாக்கால் வெற்றி பெற்றுள்ளது.

மேற்படி நகரசபையின் வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுக் கூட்டம் நேற்று முன்தினம் தவிசாளர் யோ. இருதயராஜா தலைமையில் இடம் பெற்றது.

15 உறுப்பினர்களைக் கொண்ட நகரசபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியை சேர்ந்த ஒரு உறுப்பினரும், சுயேட்சை குழுவைச் சேர்ந்த ஒரு உறுப்பினரும் வரவு- செலவுத் திட்ட முன்மொழிவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். (5-4-60)

# யாழ். மாநகர எல்லைக்குள் வடிகாலமைக்கும் திட்டம்





(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி அபிவிருத்தி அனுசரணைத் திட்டம் (LDSP) ஊடாக யாழ்.மாநகரசபைக் குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்களில் ஆரம்ப கட்டமாக யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி சந்திக்கும் இலுப்பையடி சந்திக்கும் இடையில் வடிகால் அமைக்கப்படவுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான உத்தியோகபூர்வ கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்டின் தலைமையில் வடிகால் அமைக்கப்படவுள்ள பகுதியில் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் இத்திட்டம் தொடர்பிலும், ஒப்பந்ததாரர் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பிலும் துறைசார் அதிகாரிகளால் கருத்துக்களும், தெளிவுபடுத்தல்களும் முன்வைக்கப்பட்டன.

மேலும் இக் கலந்துரையாடலில் , குறித்த வட்டாரத்திற்கான மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்தீபன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், யாழ்.மாநகர சபைப் பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி அபிவிருத்தி அனுசரணைத் திட்ட அலுவலர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், அப்பகுதி பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-4)

# வெள்ளம் வழிந்தோட வழிசெய்ய கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

புலோலி தெற்கு கூவில் 5ஆம் வட்டார வீதியில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக அதிகளவு வெள்ளநீர் தேங்கி நிற்கிறது.

அப்பிரதேசத்திலுள்ள பிரதான வீதி புனரமைப்பு பணியின் போது உயரமாக அமைக்கப்பட்டமையால் வெள்ளம் தாழ்வான பகுதிக்கு வருவதனாலேயே இவ் வெள்ள நீர் தேங்கி நிற்பதாகவும் அவ் வீதியூடான போக்குவரத்தின் போது பெரும் சிரமத்திற்கு முகம் கொடுப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்ற னர்.

எனவே உரிய அதிகாரிகள் அப் பகுதியில் தேங்கியுள்ள வெள்ள நீரை வழிந்தோட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (5-4)

# சமயதீட்சை நாளை

(குப்பிழான்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலயத்தில் ஐப்பசி இறுதி வெள்ளி நாளான நாளை வெள்ளிக் கிழமை காலை 8 மணியளவில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ ரவீந்திரராசக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள குறித்த நிகழ்வில் சமய தீட்சை பெற விரும்புவோர் மாத்திரம் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றிக் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-18)



**பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய அங்கஜன் இராமநாதன் சார்பாக அவரது இணைப்பாளர் இனியவன் கரணவாய் மாவடி பராசக்தி சனசமூக நிலையத்தை அண்மையில் திறந்து வைத்தார்.**
**(படம்-மகாலிங்கம்)**

# விளையாட்டு வீரர்களுக்கு கொரோனா தொற்று உறுதி

(கொழும்பு)

இலங்கையின் இரண்டு விளையாட்டுவீரர்கள்கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதில் ஒருவர் தேசிய நிலை கூடைப்பந்து வீரராவார்.

ஒலிம்பிக்கிற்கான இலங்கை விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சியளிக்க சர்வதேச பயிற்சியாளர்கள் அழைக்கப்படவிருந்தனர். எனினும் கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக இந்தத் திட்டம் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கொரோனா வைரஸ் பரவலுக்கான பொறுப்பை அரசே ஏற்க வேண்டும்

## ஊடகங்கள், பொதுமக்கள் மீது பழிபோட முடியாது

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலுக்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்கவேண்டும் என ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.



மேலும் கொரோனா வைரஸ் பரவலுக்கு பொதுமக்கள் மீதும் ஊடகங்கள் மீதும் அரசாங்கம் பழிபோட முயல்கின்றது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொரோனா வைரஸினை கட்டுப்படுத்துவதற்கான இறுக்கமான திட்டங்கள் இல்லாததன் காரணமாக பொதுமக்கள் பெருமளவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா வைரஸ் தருணத்தில் அரசாங்கம் பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொண்டுள்ளது எனக் குற்றம்சாட்டியுள்ள அவர், தற்போதைய நிர்வாகம் கொரோனா வைரஸினை கட்டுப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தினை நிர்வகிப்பதற்கும் தவறியுள்ளது.

பொதுமக்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கு பதில் அரசாங்கம் இந்த இக்கட்டான தருணத்தில் இலாபம் சம்பாதிக்க முயல்கின்றது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (நி-4)

# கடும்போக்கு கொள்கைகளை உடைய ஐ.எஸ்.தீவிரவாதிகள் இலங்கையில் உள்ளனர்

## செய்தி வெளியிட்ட பிரித்தானிய ஊடகம்

தீ (லண்டன்) விர கடும்போக்குக் கொள்கைகளை கொண்ட ஐ.எஸ்.தீவிரவாதிகள் இலங்கையில் இருப்பதாக பிரித்தானிய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து சென்று ஐ.எஸ்.தீவிரவாத இயக்கத்தில் இணைந்து கொண்டவர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கலிபாக்களினால் ஆட்சி செய்யப்படும் இஸ்லாமிய தேசமாக ஐ.எஸ்.தீவிரவாதிகளினால் உருவகிக்கப்பட்ட ஆட்சி கவிழ்ந்ததனைத் தொடர்ந்து இவ்வாறு கடும்போக்குடைய தீவிரவாதிகள் தங்களது நாடுகளுக்கு திரும்பியுள்ளதாகப் பிரித்தானிய ஊடகம் தெரிவிக்கின்றது.

கடந்த ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் உரிமை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐ.எஸ்.தீவிரவாத இயக்கம் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாகவும் இலங்கை உள்ளிட்ட நாடுகளில் தீவிரவாதிகள் செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஐ.எஸ்.தீவிரவாத இயக்கம் தொடர்ந்தும் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் கலிபா ஆட்சி வீழ்ச்சியைத் தொடர்ந்தும் அந்த அமைப்பு கொலைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மொஸாம்பிக்கில் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்களை கொடூரமான முறையில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் படுகொலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஐவருள் ஒருவருக்கு உளநலப் பாதிப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளாகும் ஐவருள் ஒருவர் 90 நாட்களுக்குள் உளநலப் பாதிப்பை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் உளவியல் நிபுணர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் மூலம், இந்த விடயம் தெரியவந்துள்ளதாகவும் இவ்வாறு உளரீதியான பாதிப்பை எதிர்கொள்பவர்கள், மனஅழுத்தம் மற்றும் நித்திரையின்மை போன்ற நோய்களுக்கு முகம் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் உளரீதியான பாதிப்பை எதிர்கொள்வதற்கான காரணம் மற்றும் அதற்கான சிகிச்சை குறித்து, உலகளாவிய ரீதியில் உள்ள வைத்தியர்கள் மற்றும் வைத்திய நிபுணர்கள் உடனடி கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-4)

# முகக் கவசங்களை அகற்ற விசேட ஆலோசனை

(கொழும்பு)

முகக்கவசம், கையுறைகள் உள்ளிட்ட மருத்துவக் கழிவுகளை அகற்றுவது தொடர்பான ஆலோசனை அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையால் இந்த அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சகல உள்ளூராட்சிநிறுவனங்களுக்கும் இவை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தனிமைப்படுத்தல் நிலையங்கள் மற்றும் சுயதனிமைப்படுத்தப்பட்ட வீடுகளிலும் அகற்றப்படும் முகக்கவசம், கையுறைகள் உள்ளிட்ட மருத்துவக் கழிவுகளை அகற்ற பிரத்தியேக வாகனம் மற்றும் பணியாளர்களை ஈடுபடுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றாளர்கள் பயன்படுத்திய முகக்கவசங்கள், கையுறைகளை மஞ்சள் நிற பையில் இட்டு வேறுபடுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு மஞ்சள் நிற பைகளில் இடப்பட்டுள்ள மருத்துவக்கழிவுகளை எக்காரணம் கொண்டும் மீள் சுழற்சிக்குட்படுத்த வேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காக பொதுமக்கள் அணியும் முகக்கவசங்கள் மற்றும் கையுறைகளை கழிவுத் தொட்டியில் இடுவதற்கு முன்னர், நன்றாக கழுவி, காயவைத்த பின்னர் அகற்றுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)


கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 1953 . 05 . 07 இறப்பு 2020 . 11 . 09

எமது சக நண்பன் திரு.சலீஸ்ரன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர்.

பெனடிக்ற் அன்னரெத்தினம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்ந்த துயரத்துடன்
யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்.

(4623)



தேன் ஒரு அருமருந்து, சீனிக்கு பதிலாக தேனைப் பயன்படுத்துவதனால் இரத்தத்திலுள்ள சீனியின் அளவு சீராகி கொலஸ்ரோலின் அளவு குறையும், இதயநோய் தாக்காது, உடல் எடை குறையும் இவ்வாறு பல பயன்களைக் கொண்டது



றோயல் சுத்தமான தேன்

உங்கள் முழுக்குடும்பத்தின் ஆரோக்கியத்தினைப் பாதுகாத்திட இன்றே பாவியுங்கள் றோயல் சுத்தமான தேன்.

ஆய்வு கூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதி செய்யப்பட்டது.




PACKED BY: ®
ROYAL INDUSTRY,
JAFFNA

சந்தைப்படுத்துவோர்: ®
சிவா நறுமணப் பூங்கா,
இல, 288, ஆஸ்பத்திரி வீதி
(சத்திரத்து சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு- 021 222 2567

(C-660)





கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட தொற்றுநோய் சிகிச்சை நிலையம் நேற்று சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வட மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வடமாகாண ஆளுநரின் செயலாளர், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி, கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்: தேவானந்தன்)

# கால்வாயை சீர்செய்து தருமாறு வர்த்தகர்கள் கோரிக்கை



(நெளுக்குளம்)

வவுனியா முதலாம் குறுக்கு தெருவில் 45 மீற்றர் நீளம் கால்வாய் அமைக்கும் பணிகள் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் குறித்த வேலைத் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளாமல் இடைநடுவில் கைவிடப் பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் பெரும் பாதிப்படைந்துள்ளதுடன் தற்போது பெய்து வரும் பருவ மழையினால் கால்வாய் அமைக்க தருவிக்கப்பட்ட மணல் வெள்ள நீரில் அடித்துச் செல்லப் பட்டு வருவதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர் .

வவுனியா நகரசபை வட்டார நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப் பட்ட கால்வாய் அமைக்கும் பணிகள் பருவ மழைகாலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் அதனைச்சூழவுள்ள வர்த்தக நிலையங்களுக்கு செல்லும் மக்கள் அங்கு வெட்டப்பட்டுள்ள கால்வாய் குழிகளை கடந்து செல்வதால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கால்வாய்க்கு வெட்டப்பட்ட மண் அங்கு குவிக்கப்பட்டுள்ளதால் மணமேடுகளைக் கடந்து செல்லமுடியாமலும் பருவ மழையினால் வெட்டப்பட்ட கால்வாய் குழிகள் திரும்பவும் வெள்ள நீரில் தூர்ந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனை சரியான முறையில் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கோருகின்றனர்.

இது குறித்து நகரசபை உறுப்பினர் கே.இராஜலிங்கத் துடன் தொடர்பு கொண்டு வினவியபோது, இவ்விடயம் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு சென்று உடனடி நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (5-4-299)

# கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த வேண்டுகோள்

(குருமன்காடு)

வவுனியா நகரப்பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளினால் நகரின் அழகு சீர்குலைவதுடன் போக்குவரத்துக்கும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

குறிப்பாக வவுனியா நகரம், வவுனியா - மன்னார் பிரதான வீதி, பட்டானிச்சூர், வேப்பங்குளம், குருமன்காடு சந்தி போன்ற பகுதிகளில் நடு வீதிகளில் கால்நடைகள் நிற்பதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன.



கட்டாக்காலி மாடுகளினால் கடந்த மாதத்தில் மாத்திரம் 10க்கு மேற்பட்ட விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த நகர சபையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-250)

# குளம் உடைப்பெடுத்து பல ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

(நெளுக்குளம்)

வவுனியா ஊற்றுக்குளம் உடைப்பெடுத்துள்ள நிலையில் பல ஏக்கர் வயல் நிலம் பாதிக் கப்பட்டுள்ளது.

வவுனியாவில் பெய்த கடும் மழையின் காரணமாக நெடுங்கேணி பகுதியில் உள்ள ஊற்றுக் குளத்திற்கு நீர் வரத்து அதிகரித்த நிலையிலேயே குளம் உடைப்பெடுத்துள்ளது.

இவ்வாறு அக்குளம் உடைப் பெடுத்தனால் அப்பகுதியில் பல ஏக்கர் நெற்செய்கை வயல்கள் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா விவசாயத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-299)

# பொருளாதார மத்திய நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு திறக்க நாமலிடம் கோரிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா மதகுவைத்த குளம் பகுதியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கட்டி முடிக்கப்பட்ட போதிலும் மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கப் படாமலிருக்கும் பொருளாதார மத்திய நிலையத்தை திறந்து மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்குமாறு வவுனியாவிற்கு வருகை தந்த விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது .

கடந்த திங்கட்கிழமை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நகரிலுள்ள வர்த்தகர்கள் எதிர்நோக்கும் விடயங்கள் குறித்த கலந்துரையாடல் ஒன்று வவுனியா வர்த்தகர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது .

இதன்போது, கலந்து கொண்ட வர்த்தக பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் மதகுவைத்த குளம் பகுதியில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் கட்டி முடிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவில்லை .

பாவனையற்றுக் காணப்படும் பொருளாதார மத்திய நிலையத்தின் செயற்பாடுகளை விரைவாக ஆரம்பித்து மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதையடுத்து குறித்த விடயத்துடன் தொடர்புடைய துறையினருடன் கலந்துரையாடி மிக விரைவில் திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் வர்த்தகப் பிரதிநிதிகளுக்கு உறுதியளிக்கப்பட்டது. (5-4-299)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடைசெய்க

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெறும் இந்திய இழுவைப் படகுகளின் அத்து மீறிய செயற்பாடுகள் காரணமாக, தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன், கடல்வளமும் வெகுவாகப் பாதிக்கப்படுவதாக முல்லைத்தீவு மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டைக் கட்டுப்படுத்துமாறு கோரி, நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலரிடம் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் லோ.ஜூட்நிக்சன் மற்றும் கணக்காளர் அ.சண்முகலிங்கம் ஆகியோர் மகஜர் ஒன்றினைக் கையளித்தனர்.

அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் கடல் பரப்பிலிருந்து, மாத்தளன், கொக்கிளாய் ஆகிய கடற்பரப்புகளில் இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகள், இழுவை மடிகளைப் பயன்படுத்துவதனால் தமது வாழ்வாதாரமான மீன்பிடித்தொழில் பாதிக்கப்படுகிறது.

எனவே இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களை தடுத்து தமது வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதுடன், எமது கடல்வளத்தினைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனக் குறித்த மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளது. (5-4-281)

# இராசிபலன்

12.11.2020
ஐப்பசி 27, வியாழக்கிழமை
துவாதசி முன்னிரவு 6.47 மணிவரை
அத்தம் நள்ளிரவு 12.01 மணிவரை
சுபநேரம் 7.36-9.06 மணிவரை
இராகுகாலம் 1.36-3.06 மணிவரை
சந்திராஷ்டமம் -சதயம், பூரட்டாதி
பிரதோச விரதம் வளவன்

**மேஷம்** — நல்லவர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** — கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பாராட்டும் புகழும் கூடும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்** — தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்** — காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள் உடன் பிறப்புக்கள் உங்களின் கருத்துக்களை ஏற்பர், செய்தொழிலில் மேன்மையடைவீர்கள்.

**சிம்மம்** — கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** — தேச நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும் , போசன சுகமுண்டு.

**துலாம்** — நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்** — சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**தனுசு** — குடும்பத்தில் ஒற்றுமை கூடும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், போசன சுகமுண்டு.

**மகரம்** — குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், புதிய சிந்தனைகள் தோன்றும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் பெருக வழிசமைப்பீர்கள்.

**கும்பம்** — மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**மீனம்** — நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், வழிபாடு மகிழ்ச்சி தரும் புதிய பொருட் சேர்க்கையுண்டு.

தீய எண்ணங்களை உனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளாதே.

# அமெரிக்காவின் விருப்பங்கள் இலங்கை மீது திணிக்கப்படாது

## அலைனா திட்டவட்டம்



(கொழும்பு)
அமெரிக்காவின் விருப்பங்கள் இலங்கை மீது திணிக்கப்படாது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இலங்கை மீதோ அல்லது வேறு நாடுகளின் மீதோ அமெரிக்காவின் விருப்பங்கள் திணிக்கப்படாது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் நட்பு நாடு என்ற வகையில் நாட்டில் பேண்தகு அபிவிருத்தி, தேசிய ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு அமெரிக்கா உதவும் என்றும் அமெரிக்காவின் முதலீடுகள் பிராந்திய வலயத்தில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குமே தவிர, கடன் சுமையை அதிகரிக்காது என்றும் தெரிவித்தார்.

பாத்பைன்டர் அமைப்பால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் இணைய வழியாக பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ-4)

## நுழைவாயில் திறப்பு

(கொழும்பு)
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கம்புறுப்பிட்டிய புதிய நுழைவாயிலை எதிர்வரும் 16 ஆம் திகதி திறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நிபுன ரனவக்கவின் கோரிக்கைக்கமைய இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதிவேக நெடுஞ்சாலையை கம்புறுப்பிட்டிய ஊடாக தெணியாய வரை நீடிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளதுடன், குறித்த நெடுஞ்சாலை திரும்பவும் தெனியாயவிலிருந்து அம்பாந்தோட்டை வரை நீடிக்குமாறும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# கொரோனா அபாய வலயத்தில் இலங்கை

## மீண்டெழும் என்கிறது உலக சுகாதார ஸ்தாபனம்

**(கொழும்பு)**
**நாடு தற்போது கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்குள் தள்ளப்பட்டுவிட்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

இந்த எச்சரிக்கையை அந்த நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ராசியா பெண்டிசே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் , மக்கள் நடந்து கொள்கிற முறையிலேயே இனிப் பாரதூர விளைவுகள் ஏற்படுமா? இல்லையா? என்பது நிர்ணயிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அபாய வலயத்தில் நாடு இருந்தாலும் அதிலிருந்து மீண்டெழும் இடத்தில்தான் இருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், அனைத்தும் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# அதிசொகுசு பேருந்து விபத்து

(கொழும்பு)
கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இந்நாட்டுக்கு வருகை தந்தவர்களை தனிமைப்படுத்தல் மத்திய நிலையம் நோக்கி அழைத்துச் சென்ற அதிசொகுசு பேருந்து ஒன்று கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் விபத்திற்குள்ளானது.

நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலையில் பேலியகொட நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது குறித்த பேருந்து விபத்திற்குள்ளானது.



இவ் விபத்தில் பேருந்தின் சாரதி காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து காரணமாக கட்டுநாயக்கவில் இருந்து கொழும்பு நோக்கிய நெடுஞ்சாலை ஒழுங்கை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (ஐ-4)

## கொழும்பு மாநகரில்

# 30 ஆயிரம் தொற்றாளர்கள் நடமாடலாம்

(கொழும்பு)
கொழும்பில் 30 ஆயிரம் கொரோனா தொற்றாளர்கள் இருக்கலாம் என, கொழும்பு மாநகர சபையின் பிரதான வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜேமுனி தெரிவித்தார். கொழும்பில் எழுமாறாக 400 பேருக்கு பி.சி.ஆர் செய்யப்பட்ட போது, 19 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய, இது 5 சதவீதத்தைக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் அன்றாட செயற்பாடுகளில் ஈடுபடும் மக்கள் தொகை செறிவில் 30 ஆயிரம் தொற்றாளர்கள் சுற்றித்திரியலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே இதனை கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-4)

# சிறுவர் துஷ்பிரயோக உலகளாவிய வலையமைப்பில் சிக்கிய சிறுவர்கள்

## மீட்ட அவுஸ்திரேலிய பொலிஸார்



(கன்பெரா)


சர்வதேச சிறுவர் துஷ்பிரயோக வலையமைப்பு தொடர்பான விசாரணையின் பின்னர் 46 சிறுவர்களை மீட்டுள்ள அவுஸ்திரேலிய பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பாக 14 பேரை கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பலர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பிற வகையான சுரண்டல் உள்ளிட்ட துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விசாரணையை அடுத்து அமெரிக்காவில் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் அத்தோடு ஐரோப்பா, ஆசியா, கனடா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் சந்தேக நபர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் 15 வயதிற்கு உட்பட்டவர்கள் என்றும் அவர்கள் சிறுவர் நிலையங்களில் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவுஸ்திரேலிய பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி)

# ட்ரம்ப் தோல்வியை ஏற்க மறுப்பது தர்ம சங்கடமாக உள்ளது - பிடன்




(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் பெற்றுள்ள தோல்வியை ட்ரம்ப் ஏற்க மறுப்பது தர்மசங்கடமாக உள்ளது என ஜோ பிடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைந்திருந்தாலும், தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்று இருப்பதாக கூறி தோல்வியை ஏற்க ட்ரம்ப் மறுத்து வருகிறார். தேர்தல் தொடர்பாக அமெரிக்காவின் பல்வேறு இடங்களில் ட்ரம்ப் பிரசாரக் குழு வழக்கு தொடுத்து உள்ளது.

இந்நிலையில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த ஜோ பிடன், ட்ரம்ப் தோல்வியை ஏற்க மறுப்பது தர்மசங்கடமாக உள்ளது என்றார்.

ட்ரம்பின் நடவடிக்கை ஜனாதிபதியின் பாரம்பரியத்திற்கு உகந்ததாக இருக்காது. ஜனவரி மாதத்தில் அனைத்தும் பலனளிக்கும் விதமாகவே அமையப் போகிறது.


நம்பிக்கையான எதிர்பார்ப்பு என்னவென்றால், ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அமெரிக்க மக்கள் புரிந்து கொள்கிறார்கள்.

கடந்த 5,6 ஆண்டுகளில் நாம் கண்டுவந்த கசப்பான அரசியலில் இருந்து நமது நாட்டை நாம் விடுவிப்போம் என்று நம்புகிறேன்.

நடந்து விடும் என்ற பார்வையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது என நான் நினைக்கிறேன். ட்ரம்ப் அல்லது மைக் போம்பியோ தரப்பு இதுவரை கூறி வரும் குற்றச்சாட்டுகளுக்கு தற்போது வரை எந்த ஆதாரங்களும் இல்லை.

குடியரசுக் கட்சியினர் எனது வெற்றியை நிச்சயம் ஏற்றுக்கொள்வார்கள் எனத் தெரிவித்தார். (நி)

# இடைத்தேர்தலில் பா.ஜ.கவுக்கு அபார வெற்றி மக்களுக்கு நன்றி தெரிவித்த பிரதமர் மோடி



(டில்லி)

நாடு முழுவதும் நடைபெற்ற இடைத்தேர்தலில் பா.ஜ.க.வுக்கு வெற்றியை வழங்கிய மக்களுக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேசம் உட்பட நாடு முழுவதும் மொத்தம் 58 தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தல் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகின.

இதில் பெரும்பாலான தொகுதிகளை பா.ஜ.க. கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில், இடைத்தேர்தலில் பா.ஜ.கவுக்கு வெற்றியை வழங்கிய மக்களுக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்துள்ளார். (நி)

# தடுப்பூசி தயாராகி விட்டதால் தற்போதைய பரவல் நிலை மாற்றமடையும்




(ஜெனீவா)

முழு உலகை ஆட்டங்காண வைத்துள்ள கொரோனா வைரஸிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் காப்பாற்றிக் கொள்ள அனைத்து உலக நாடுகளும் போராடி வருகின்றன.

அடுத்த வருடம் 2021 மார்ச் மாதம் பயன்படுத்தக்கூடிய கொவிட் 19 இற்கான தடுப்பூசி தற்போதைய கொரோனா பரவல் நிலைமையை முழுமையாக மாற்றக்கூடும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை, உலக சுகாதார அமைப்பின் சிரேஷ்ட அதிகாரி புரூஸ் அய்ல்வேர்ட் வெளியிட்டுள்ளார்.

பைசர், பயோடெக் ஆகிய நிறுவனங்கள் உருவாக்கியுள்ள கொவிட் 19 தடுப்பூசி பெரும்பாலும் வெற்றி மட்டத்தில் இருப்பதாகவும், குறித்த கொரோனா தடுப்பூசி 90 சதவீதம் தொற்றிலிருந்து பாதுகாக்கும் என ஆய்வில் தகவல் வெளியிடப்பட்டுள்ளமை மேலும் நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)



**இந்திய தேசப்பிதா மகாத்மா காந்தியின் 151 ஆவது பிறந்த தினத்தை குறிக்கும் வகையில், நேபாள மொழியில் தொகுக்கப்பட்ட மகாத்மா காந்தி குறித்த நூல் தொகுப்பை நேபாள ஜனாதிபதி வித்யாதேவி பண்டாரி வெளியிட்டார். "காந்தியடிகளை நான் புரிந்துகொண்டது" என்ற தலைப்பிலான இந்த நூல், காந்தியடிகளின் வாழ்க்கை மற்றும் அவருடைய சிந்தனைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.**

# அமெரிக்க மருத்துவக் குழுவில் தமிழக வைத்தியர் நியமனம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கொரோனாவைக் கட்டுப்படுத்த ஜோ பிடன் நியமித்த குழுவில் தமிழக பூர்வீகத்தைச் சேர்ந்த வைத்தியர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியாக ஜோ பிடன் வெற்றி பெற்றுள்ளார். இதைத் தொடர்ந்து அந்நாட்டில் கொரோனா வைரஸ் பாதிப்பை கட்டுப்படுத்த 13 பேர் அடங்கிய குழு ஒன்றை ஜோ பிடன் நியமனம் செய்திருக்கிறார்.

இந்தக் குழுவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வைத்தியர்களும் இடம்பிடித்துள்ளனர். அந்தவகையில் தமிழகத்தின் ஈரோடு மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட செலின் கவுன்டர் அமெரிக்காவில் கொரோனாவைக் கட்டுப்படுத்தும் குழுவில் இடம்பிடித்து இருக்கிறார். (நி)

# பரிசோதனைக்களமாக இலங்கையை மாற்ற வேண்டாம்

## தடுப்பூசி குறித்து சஜித்

**(கொழும்பு)**

**கொவிட்-19 நோய்த் தொற்றுக்கான தடுப்பூசியை பரிசோதனை செய்யும் மைதானமாக இலங்கை மக்களை பயன்படுத்தக் கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



நேற்று நடைபெற்ற கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

கொவிட் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி இலங்கை மக்களுக்கு வழங்கப்படுவது வரவேற்கப்பட வேண்டியது. அதில் எவ்வித மாற்றுக் கருத்துக்களும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், எந்தவொரு தடுப்பூசியும் பரீட்சார்த்த அடிப்படையில் இங்கு கொண்டு வரப்பட்டு பரிசோதனை செய்யப்படக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொவிட்-19 தடுப்பூசியானது நன்கு பரிசோதனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிலையிலேயே நாட்டு மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

மேலும், கொவிட்-19 நோய்த் தொற்றுக்கான தடுப்பூசி நாட்டின் அனைத்து மக்களுக்கும் இலவசமாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சஜித் பிரேமதாஸ கோரியுள்ளார். (நி-4)

# அமைச்சரவையை மாற்றத் தயாராகும் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை அமைச்சரவையில் விரைவில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அரசாங்க தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்போது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் சிலரின் பதவிகளில் மாற்றம் ஏற்படவுள்ளதாக தெரிய வருகிறது.

எதிர்வரும் வாரம் இந்த அமைச்சரவை திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதென சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

20 ஆம் அரசியலமைப்பிற்கு அமைய ஜனாதிபதி தான் விரும்பியதனை போன்று அமைச்சரவையை மாற்றிக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்



(கொழும்பு)

இந்திய நிதியுதவியின் கீழ் இலங்கை மதிப்பில் 600 மில்லியனுக்கும் அதிகமான செலவில் இலங்கையில் செயற்படுத்தப்படும் சமூக அபிவிருத்தி திட்டத்திற்காக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தமானது 2005 ஆம் ஆண்டு தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக சேவையாற்றிய காலப் பகுதியில் கைச்சாத்திடப்பட்டது என்பதுடன் அது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நீடிக்கப்பட்டு கையெழுத்தாகின்றது.

இந்நிலையில், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவின் பங்கேற்புடன் விஜேராமவிலுள்ள பிரதமரின் இல்லத்தில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்திற்கு அமைவாக விசேட அபிவிருத்தித்திட்டத்திற்கான செலவு 300 மில்லியன் ரூபாய்க்கு அதிகமாவதுடன் அவசரகால அம்புலன்ஸ் சேவை, வீடமைப்புத் திட்டம், புதிய யாழ்.கலாசார மத்திய நிலைய செயற்பாடுகள் என்பன இதனூடாக செயற்படுத்தப்படும்.

சிறு அபிவிருத்தித் திட்டத்திற்காக அதிகபட்சமாக 300 மில்லியன் ரூபாய் செலவிடப்படுவதுடன், மீள்குடியேற்றம், தங்குமிடம், வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு, பெண்களுக்கு அதிகாரமளிக்கும் தொழிற்பயிற்சி, கல்வி மற்றும் ஆராய்ச்சி, கலாசார நடவடிக்கை, விளையாட்டு, தொழிற்றுறை மேம்பாடு, மருத்துவ நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் வைத்திய உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பனவும் இதன் கீழ் செயற்படுத்தப்படவுள்ளன.

தற்போது செயற்பாட்டிலுள்ள இந்தத் திட்டம் புதிய ஒப்பந்தத்திற்கமைய தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# "சௌபாக்கியா" கடன் திட்டம்; மீளளிக்கும் கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

கொவிட் தொற்று நிலைமையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நடவடிக்கைகளை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்குடன் வழங்கப்பட்ட சௌபாக்கியா கொவிட் - 19 புனர்வாழ்வு கடன் திட்டத்தின் தவணைப் பணத்தை செலுத்துவதற்கான காலத்தை மேலும் 3 மாதங்களினால் நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதி அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இதற்கமைவாக கடன் தவணைப் பணத்தை செலுத்துவதற்காக இதுவரையில் வழங்கப்பட்ட 6 மாத நிவாரணக் காலம் 9 மாதம் வரையில் நீடிக்கப்படுகின்றது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொவிட் - 19 இரண்டாவது அலையின் காரணமாக பெரும்பாலான கடன் பயனாளிகள் எதிர்பார்த்த வகையில் தமது வர்த்தக நடவடிக்கைகளை கட்டியெழுப்புவதற்கு முடியாமல் போயுள்ளது என்பதை கவனத்தில் கொண்டதன் காரணமாக அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கொவிட் தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட நிதியம் மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகங்களை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட சௌபாக்கியா கொவிட் - 19 புனர்வாழ்வு கடன் திட்டத்தின் கீழ் இதுவரையில் 61,907 வர்த்தக முயற்சியாளர்களுக்கு 177.9 பில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கடன் வசதி வழங்கப்படுள்ளது.

கொவிட் - 19 தொற்றின் காரணமாக பாதிகப்பட்டுள்ள வர்த்தகங்களை மீண்டும் கட்டியெழுப்பி இலங்கை மக்கள் வாழ்க்கையையும் நாட்டின் பொருளாதாரத்தையும் வழமை நிலைக்கு கொண்டு வரும் நோக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் அடிப்படையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் சௌபாக்கியா கொவிட் - 19 புனர்வாழ்வு கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# நாளாந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வீடுகளுக்கு சென்று வாழ்வாதாரம் வழங்குங்கள்



(கொழும்பு)

கொரோனா என்பது சுகாதாரப் பிரச்சினை மட்டுமல்ல. அது பொருளாதார பிரச்சினை ஆகிவிட்டது. அதாவது வீட்டுக்குள் முடங்கி, தொழில் இழந்து வாழும் மக்களின் வீட்டு பொருளாதார பிரச்சினை ஆகிவிட்டது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் கொரோனா தொற்று தொடர்பில் சந்திக்கும் சுகாதார மற்றும் வாழ்வாதார உதவித்தொகை பெறும் சிக்கல்கள் தொடர்பாக மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு மாநகரில் 12 பொலிஸ் வலயங்களும் ஆறு தொடர்மாடி குடியிருப்புகளும் முடக்கப்பட்டுள்ளன. இதற்குள்ளே வாழும், தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ரூ. 10,000 வழங்கப்படுகிறது. அதேவேளை முடக்கல் காரணமாக நாளாந்த வேலை, சுய தொழில், கூலித்தொழில் ஆகியவை காரணமாக நிர்க்கதி நிலைமைக்கு உள்ளாகி இருப்போருக்கு ரூ. 5,000 வழங்கப்படுகிறது.

இத்தகைய குறைந்தவருமான, நாளாந்த வருமான குடும்பங்கள் எதுவென பெரிய ஆய்வுக் குழுக்களை அமைத்து தேட வேண்டியதில்லை. இந்த பகுதிகளில் வாழும் பெரும்பாலோர் அன்றன்று உழைத்து சம்பாதித்து வாழ்பவர்கள்.

இவர்களுக்கு அடுத்த நாளைப்பற்றி கவலைப்பட்டு சேமித்து வைக்க வருமானம் இல்லை. ஆகவே ஒவ்வொரு நாளும் உழைத்து வாழும் இந்த உழைப்பாளிகள் இன்று வீடுகளுக்குள்ளே முடங்கி இருக்கிறார்கள். ஆகவே தாமதிக்காமல் இவர்களுக்கு உடனடியாக வீடு வீடாகச் சென்று வாழ்வாதாரம் வழங்குங்கள்.

சுகாதார பிரச்சினையை பார்த்தால், கொழும்பு மாநகரில் அதிக பாதிப்புக்கு உள்ளாகியுள்ள முதல் மூன்று வட்டாரங்கள் மட்டக்குளி, முகத்துவாரம், கொட்டாஞ்சேனை தெற்கு ஆகியவைதான்.

ஆகவே இவை தான் இன்று முழு இலங்கையிலும் அதிக பாதிப்புக்கு உள்ளான வட்டாரங்கள் என்பதை மனதில் கொள்ளுங்கள்.


ஆகவே இங்கேதான், அதிக பீ.சி.ஆர். பரிசோதனைகள், அதிக சுகாதார கவனிப்புகள், அதிக பொருளாதார வாழ்வாதார வழங்கல்கள் இடம்பெற வேண்டும். இவற்றுக்கு அதிக அவதானம் காட்டுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# கொரோனாவில் இருந்து தப்ப தற்கொலை தீர்வு அல்ல

## அச்சம் தவிர்ப்போம்; சுகாதார விதிமுறைகளை பின்பற்றுவோம்

**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் அச்சத்திற்குள்ளான சிலர் தற்கொலை செய்து கொள்வது கவலைக்குரிய விடயமாகும் என சுகாதார அமைச்சின் பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித்துள்ளார்.**



எவ்வித அறிகுறிகளும் அற்ற தொற்றாளர்களில் 80 சதவீதமானோர் குணமடைந்துள்ளதைப் போன்று அறிகுறிகளுடன் இனங்காணப்பட்ட பலரும்முழுமையாககுணமடைந்துள்ளார்கள் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உடல் நலக்குறைவு அல்லது ஏதேனும் அறிகுறிகள் ஏற்பட்டால் வீட்டிலேயே இருந்து விடக்கூடாது என்றும் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் தொற்று தொடர்பான அச்சத்தில் சிலர் தற்கொலை செய்து கொள்வது கவலைக்குரிய விடயமாகும் எனத் தெரிவித்துள்ள ஜயருவான் பண்டார, இது செய்யக்கூடாததும் இடம்பெறக்கூடக் கூடாததுமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வாறு அச்சமடைய வேண்டிய தேவை கிடையாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொற்றுக்குள்ளானவர்கள் அருகில் இருந்தாலும் முகக் கவசத்தை முறையாக அணிந்திருந்தால் ஏனையோர் தொற்றுக்குள்ளாவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகும் என்றும் கொரோனாவுடன் வாழ்வதற்கு இந்த அடிப்படை சுகாதார விதிமுறைகளை நிச்சயம் பின்பற்ற வேண்டும் எனவும் சுகாதார அமைச்சின் பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித்துள்ளார். (நி-4)

# மீண்டும் தலைதூக்கும் இஸ்லாமிய அடிப்படைவாதம்- எச்சரிக்கிறார் தேரர்

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழக்கும் முஸ்லிம் இனத்தவர்களின் உடலை தகனம் செய்வதை பிரதானமாக கொண்டு இஸ்லாமிய அடிப்படைவாதம் மீண்டும் தலைதூக்கியுள்ளது. பௌத்தர்கள் உரிமைகளை கோரினால் பாரிய நெருக்கடி ஏற்படும் என பொதுபல சேனா அமைப்பின்பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபலசேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழக்கும் முஸ்லிம் தரப்பினரது உடல்களை எரிப்பதா, புதைப்பதா என்பது தற்போதைய பிரதான பேசுபொருளாக உள்ளது. முஸ்லிம்களின் உடலை எரிக்க வேண்டாம் என இஸ்லாமிய அடிப்படைவாதிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தார்கள்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை ஒழிப்பதாக குறிப்பிட்டுக்கொண்டு ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷக்களின் அரசாங்கம் தற்போது அடிப்படைவாதிகளின் ஆலோசனைகளுக்கு அடி பணிந்துள்ளதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

2005- 2015 வரையிலான காலப் பகுதியில் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்கியது. இதனை நாங்கள் பகிரங்கப்படுத்திய போது எங்களை இனவாதிகள் என்று விமர்சித்தார்கள். ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலுடன் நாட்டில் இஸ்லாமிய அடிப்படை வாதம் எந்தளவிற்கு பலம் பெற்றுள்ளது என்பது வெளிப்பட்டது.

இஸ்லாமிய அடிப்படை வாதம் குறித்து ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் பல விடயங்கள் பகிரங்கப் படுத்தப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முற்றாக ஒழிப்பதை விடுத்து அவர்களின் கோரிக்கைக்கு சார்பாக செயற்படுவது பெரும்பான்மை மக்கள் வழங்கிய ஆணைக்கு முரணானது.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்வது முஸ்லிம்சமய கோட்பாட்டுக்கு முரணானது என குறிப்பிடுகிறார்கள். கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழக்கும் போது மத சம்பிரதாய சடங்குகள் செயற்படுத்தப்படுவதில்லை. இதற்கு யாரும் போர்க்கொடி தூக்கவில்லை. நாட்டின் பாதுகாப்பு குறித்து மாத்திரமே கவனம் செலுத்தப்பட்டது.



கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை தகனம் செய்ய சுகாதார தரப்பினர் ஆரம்பத்தில் எடுத்த தீர்மானத்துக்கு ஏதுவான காரணிகளை நாட்டுமக்களுக்கு சுகாதார தரப்பினர் பொறுப்புடன் பகிரங்கப்படுத்த வேண்டும்.

கொவிட்-19 வைரஸ் தொடர்பில் இராணுவ தளபதி, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மற்றும் சுகாதாரத் தரப்பினர் என அவரவர் மாறுபட்ட கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள். எவர் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்வது என்ற குழப்பம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. ஆகவே எடுக்கும் தீர்மானத்தை ஒருவர் அறிவிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பேரறிஞர்

ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்த சமயம் அவர் ஒரு தடவை சென்னைக்கு வந்திருக்கின்றார்.எங்கே சில முக்கிய நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்வதற்காக வந்திருந்தார்.

ஆளுநர் மாளிகையில் ஒரு நாள் இரவு தங்கி மறுநாள் புது டெல்லிக்குப் புறப்படுவதான ஏற்பாடு நிகழ்ச்சிகளையெல்லாம் முடித்துக் கொண்டு ஆளுநர் மாளிகையில் தங்கியிருக்கின்றார். அன்றைக்கு இரவு படிப்பதற்கு ஒரு முக்கியமான பொருளாதாரம் சம்பந்தமான ஒரு புத்தகம் வெளியாகியிருக்கின்ற விடயம் அவருக்குத் தெரியும்.அந்தப் புத்தகம் மெட்ராசுக்கு வந்திருக்குமா? அது இங்கே கிடைக்குமா? என்று விசாரித்தார் நேருஜி.அவர் இப்படி கேட்டவுடன் அங்கே இருந்தவர்கள் எல்லாம் மிகவும் பரபரப்பாக செயற்பட ஆரம்பித்தார்கள்.

முக்கியமான இடங்களில் எல்லாம் விசாரித்தார்கள். அந்தப் புத்தகம் உங்களிடம் இருக்கின்றதா? என்று..சென்னையில் உள்ள கன்னிமாராக நூல் நிலையத்திற்கு எப்படியும் அந்தப் புத்தகம் வந்திருக்கும் என்று ஒரு நம்பிக்கை அங்கே விசாரித்தார்கள்.அந்த புத்தகம் இரண்டு நாளைக்கு முன்னால் தான் அங்கே வந்திருக்கின்றது என்னும் விடயம் தெரிந்தது.

உடனே எல்லோரும் அங்கே ஓடினார்கள். அவர்களுக்கு இன்னொரு சந்தேகம். புத்தகம் வந்திருக்கின்றது சரி..அதை இந்த சமயத்திலே வேறு யாரும் படிப்பதற்கு எடுத்துக் கொண்டு போயிருக்கக் கூடாதே...

இருந்தாலும் மனதுக்குள்ளே ஒரு தைரியம்.

இப்படி ஒரு புத்தகம் வெளிவந்திருக்கின்ற விடயமே நேருஜி சொல்லித்தான் நமக்கே தெரியும்.

அதுவும் இல்லாமல் உலகப் பொருளாதாரம் சம்பந்தமான ஏதோ ஒரு புத்தகம் அது.அதைப் போய் இந்த நேரத்திலே அவ்வளவு ஆர்வமாக யார் எடுத்துக் கொண்டு போயிருக்கப் போகின்றார்கள் என்னும் தைரியம். இந்தத் தைரியத்துடன் அந்த நூல் நிலையத்திற்கு ஓடினார்கள். புத்தகத்தைத் தேடினால் அது கிடைக்கவில்லை.யாரோ எடுத்துக் கொண்டு போய் இருக்கிறார்கள்.

நேருவுக்கு மட்டுமே தெரிந்திருந்த அந்தப் புத்தகம் பற்றிய விடயம் சென்னையிலே வேறு ஒருத்தருக்கும தெரிந்திருக்கின்றது.உடனே எல்லோரும் பரபரப்பாக வரவுப் புத்தகத்தைப் புரட்டினார்கள்.எடுத்துக் கொண்டு போனவர்கள். அதிலே கையெழுத்துப் போட்டிருப்பார்கள் அதைப் பார்த்து யாரு என்று தெரிந்து கொள்ளலாம் என்பதற்காக.

அதோ..அந்தப் புத்தகத்தினுடைய பெயர் பக்கத்திலே அதை எடுத்துக் கொண்டு போனவர்கள் கையெழுத்து. உற்றுப் பார்க்கிறார்கள் எல்லோரும்.அதிலே சி.என். அண்ணாதுரை என்று எழுதியிருந்தது. அவர் தான் பேரறிஞர் அண்ணா.

நேரு படிக்க விரும்பிய ஒரு புத்தகத்தை அதே நேரம் படிக்க விரும்பிய இன்னொரு தலைவர் இவர். படிப்பதில் அவருக்கு இருந்த ஆர்வத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அதற்கு எவ்வளவோ சம்பவங்கள் இருக்கிறது.

கடைசிக்காலத்திலே அவர் அடையாறு மருத்துவமனையில் படுத்திருக்கிறார். அவருக்கு ஒரு முக்கியமாக அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டியிருக்கு அவசரமாக.அமெரிக்காவில் இருந்து டாக்டர் மில்லர் வந்திருக்கிறார்.அவரிடம் கேட்கிறார்.

டாக்டர் நாளைக்கே அறுவைச்சிகிச்சை செய்யப் போகின்றீர்களா.. என்று. ஆமாம் என்கின்றார் டாக்டர் மில்லர். நாளை மறுநாள் செய்து கொள்கின்றேன் என்கின்றார் அண்ணா.

ஏன் ஏதாவது நாள் பார்க்கின்றீர்களா? என்கின்றார் அவர். இல்லை..ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கின்றேன்.அதை நாளைக்குள்ளே முடித்துவிடுவேன். அதன்பின்பு நான் இறந்தாலும் கவலை இல்லை...என்றார்.அவர் தான் அறிஞர் அண்ணா.


சங்க கால நூல்களிலிருந்து அண்மைய நூல்கள் வரை எல்லாம் அவர் படித்திருக்கிறார். ஒரு திருமண விழாவில் அவர் பேசும் போது சொன்ன விடயம் இது.

சங்க காலத்திலே காதலியை மணக்க விரும்புகிறவனுக்கு அவனுடைய தந்தை வீரச் சோதனைகள் எல்லாம் வைப்பார்.போய் புலிப்பல் கொண்டு வா..அப்பொழுது தான் என் பெண்ணைத் தருவேன் என்பார்.

காதலன் உடனே காட்டுக்குப் போய் ஒரு புலியைக் கொன்று,அதன் பல்லைக் கொண்டு வருவான். அதை வீரப் பதக்கத்தில் பதித்து அவனுக்கு மாமனார் சூட்டுவார் கல்யாண சமயத்திலே.

இப்பொழுதெல்லாம். காதலனிடம் காட்டுக்குப் போய் புலிப்பல் கொண்டுவா.. என்று சொன்னால் புலிதான் மாப்பிள்ளையா வரும் என்கிறார்.

# கொரோனாவால் மரணிப்போரை புதைத்தால்
# நீரில் வைரஸ் பரவும் அபாயம்?



(கொழும்பு)

**கொரோனா வைரஸால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டால், நிலத்தடி நீரில் கொரோனா வைரஸ் கலந்து குழிநீர் ஊடாக அல்லது ஊற்று நீர், ஓடைகள் வழியாகவும் பரவலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இதனை கொழும்பு ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பான பேராசிரியர் மெதிக்கா வித்தானகே தெரிவித்துள்ளார்.

உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படாமல் புதைக்க அனுமதி வழங்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்திற்கு பல வழிகளிலும் எதிர்ப்பு வெளியிடப்பட்டு வருகிறது.

குறிப்பாக இவ்வாறு உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அல்லது சடலங்களை மக்கள் அதிகம் நடமாட்டம் இல்லாத தீவுப் பகுதி அல்லது வெப்பம் அதிகம் உள்ள பகுதிகளில் புதைக்க அரசாங்கம் அனுமதி வழங்கியது.

எனினும் சுகாதார அமைச்சு இதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இந்நிலையில் குறித்த எச்சரிக்கையை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆன்டிஜென் பரிசோதனையை மேற்கொள்வதற்கு அனுமதி

(கொழும்பு)

கொரோனா நோய்த்தொற்றுகளை அடையாளம் காண நாட்டில் ரெபிட் ஆன்டிஜென் பரிசோதனையை மேற்கொள்ள சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

ஆய்வுகூட பரிசோதனையைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இந்த அனுமதி வழங்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் ஆய்வுகூட சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் டாக்டர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதனை முன்னெடுப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதற்கு தொடர்ச்சியான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்ற பின்னர் நாட்டில் உள்ள அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளின் ஆய்வு கூடங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் டாக்டர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரத்திற்கமைய, தொழில்நுட்ப மதிப்பீடுகளுக்காக நான்கு மூலக்கூறு வைத்திய ஆய்வு கூடங்களுக்கு உடனடி ரெபிட் ஆன்டிஜென் டெஸ்ட் கிட்டை அனுப்பினோம்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அந்தப் பரிந்துரையின் அடிப்படையில், இலங்கை வைத்தியசாலைகள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் அவற்றை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதற்கான வழிகாட்டுதல்களை தயாரித்து அவற்றை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கியுள்ளோம்.

அவரது கையொப்பத்துடன் இது வெளியிடப்படும் போது இலங்கை வைத்தியசாலைகளில் ரெபிட் ஆன்டிஜென் டெஸ்ட் கிட்டை பயன்படுத்த வாய்ப்புள்ளது, என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# கொரோனா உயிரிழப்பு; மீளாய்விற்கு குழு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா மரணம் தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கு தலைவராக சுகாதார அமைச்சின் அடிப்படை நலன்காப்பு சேவை பணிப்பாளர் வைத்திய கலாநிதி பிரியந்த அத்தபத்து நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவின் உறுப்பினர்களாக சிரேஷ்ட சட்ட வைத்திய அதிகாரி அஜித் தென்னக்கோன் மற்றும் தொற்று நோயியல் மருத்துவர் ஹசித்த திசேரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டில்கொரோனாத் தொற்று வேகமாக பரவி வரும் நிலையில், இதுவரையில் 41 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## அடுத்த ஆண்டு முதல்
# அரச ஊழியர்களுக்கு உள்நாட்டு ஆடை

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் அரச ஊழியர்கள் பற்றிக் அல்லது கைத்தறி நெசவுத் துணிகளால் தைக்கப்பட்ட ஆடையை அணிய வேண்டும் என அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.



பொலநறுவை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்குரிய வேலைத்திட்டம் பொது நிர்வாக அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் எனவும் நாட்டின் புடைவை உற்பத்திக் கைத்தொழிலில் நிலவும் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, நாடெங்கிலும் உள்ள ஆடை வடிவமைப்புக் கலைஞர்களின் துணையுடன் புதிய திட்டங்களை அறிமுகம் செய்யப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில், பற்றிக் ஆடை வடிவமைப்பாளர்களை பயிற்றுவித்து, அவர்களுக்கு என்-வி-கியூ சான்றிதழ்களை வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். துறைசார்ந்தவர்களுக்குச் சலுகைக் கடன்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# நிறைவடையக் கூடிய நிலையில் மினுவாங்கொட கொத்தணி
## இராணுவத் தளபதி தகவல்

(கொழும்பு)

மினுவாங்கொட கொத்தணியில் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்றும் மிகக் குறைந்தளவானோரே தற்போது இனங்காணப்படுகின்றனர். மினுவாங்கொட கொத்தணி நிறைவடையக் கூடிய நிலையிலேயே உள்ளது என இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது பேலியகொட கொத்தணியே நாடளாவிய ரீதியில் பரவியுள்ளது என்று சுட்டிக்காட்டிய அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் நடமாடும் சேவை மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இதற்காக ஒரு சில தரப்பினருக்கு மாத்திரமே அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

குருநாகல், குளியாப்பிட்டி ஆகிய பகுதிகளில் சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அச்சுறுத்தல் மிக்கவையாகவுள்ளன. அங்குள்ளவர்களிடமிருந்தே ஏனையோருக்கு வைரஸ் பரவக்கூடிய வாய்ப்பு அதிகமாகவுள்ளது. எனவேதான் அந்தப் பகுதிகள் மாத்திரம் தனிமைப்படுத்தப்பட்டு ஏனைய பகுதிகள் திறக்கப்பட்டுள்ளன.



நாட்டை முழுமையாக முடக்குவது இலகுவானது. ஆனால் அவ்வாறு செய்தால் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# பள்ளத்தில் பாய்ந்த லொறி



(கம்பளை)

பூண்டுலோயா பகுதியிலிருந்து கம்பளை பகுதிக்கு நிறபூச்சு (பெயின்ட்) வகைகளை ஏற்றிச்சென்ற லொறி ஒன்று விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

இவ்விபத்து லொறியின் சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக்கலக்கத்தால் வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாததனால் ஏற்பட்டுள்ளதாகப் போக்குவரத்துப் பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இவ்விபத்தில் இருவர் படுகாயமடைந்ததுடன் இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஜ-4)

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

16

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




2016 தேர்தலில் 7 உறுப்பினர்கள் மாறி வாக்களித்தனர். இவர்கள் நம்பிக்கையற்ற வாக்காளர்கள் ஆவர். நம்பிக்கையற்ற ஒரு வாக்காளர் அமெரிக்காவின் "தேர்வு செய்வோர் அவை" (Electoral College) யில் உறுப்பினராக இருந்து கொண்டு, அவர் ஜனாதிபதி அல்லது துணை ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்காது விடுவது. அதாவது, அவர்கள் உறுதியளித்த வேட்பாளருடனான நம்பிக்கையை உடைத்து, மற்றொரு வேட்பாளருக்கு வாக்களிக்கிறார்கள், அல்லது வாக்களிக்கத் தவறி விடுகிறார்கள். உறுதிமொழி அளித்த வாக்காளர் தங்கள் உறுதிமொழியை மீறுவதன் மூலம் மட்டுமே நம்பிக்கையற்ற வாக்காளராக கருதப்படுகிறார்.

அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களுக்கும் மக்கள் தொகை அடிப்படையில் "தேர்வு செய்வோர் அவை" (Electoral College) வாக்கு ஒதுக்கீடு பின்வருவனவாகும். அலபாமா(7), அலாஸ்கா(1), அரிசோனா(9), ஆர்கன்சஸ்(4), கலிபோர்னியா(53), கொலராடோ(7), கனெக்டிகட்(5), டெலவேர்(1), புளோரிடா(27), ஜோர்ஜியா(14), ஹவாய்(2), இடாகோ(2), இலினாய்(18), இன்டியானா(9), ஐயோவா(4), கன்சாஸ்(4), கென்டகி(6), லூசியானா(6), மேய்ன்(2), மேரிலண்ட்(8), மசாசுசெட்ஸ்(9), மிஷிகன்(14), மினசோட்டா(8), மிசிசிப்பி(4), மிசௌரி(8), மான்டனா(1), நெப்ராஸ்கா(3), நெவாடா(4), நியூ ஹாம்ஷயர்(2), நியூ ஜெர்சி(12), நியூமெக்சிகோ(3), நியூ யோர்க்(27), வட கரோலினா(13), வட டகோட்டா(1), ஒஹாயோ(16), ஒக்லஹாமா(5), ஒரிகன்(5), பென்சில்வேனியா(18), இறோட் தீவு(2), தென் கரோலினா(7), தென் டகோட்டா(1), டென்னசி(9), டெக்சாஸ் (36), உட்டா(4), வேர்மான்ட்(1), வேர்ஜீனியா(11), வோஷிங்டன் (10), மேற்கு வேர்ஜீனியா(3), விஸ்கொன்சின் (8), வயோமிங்(1).

இம் மாநிலங்கள் ஒவ்வொன்றிற்கும் 2 செனட்டர்கள் உள்ளனர். எனவே ஜனாதிபதித் தேர்தலில் கலிபோர்னியா மாநிலம் ஆகக் கூடிய 55 (53+2) தேர்வாளர் சபைப் பிரதிநிதி (electors) களையும் வயோமிங் போன்ற சில மாநிலங்கள் ஆகக் குறைந்த 3 (1+2) தேர்வாளர் சபைப் பிரதிநிதி (electors) களையும் கொண்டுள்ளன. "தேர்வு செய்வோர் அவை" பற்றி மேலதிக தகவல் பின்னர் ஆராயப்படும்.

### அமெரிக்காவில் ஜனாதிபதியை தெரிவு செய்யும் செயல்முறை உலகில் மிகவும் சிக்கலானது

அமெரிக்காவில் ஜனாதிபதியை தெரிவு செய்யும் செயல்முறை உலகில் மிகவும் சிக்கலான, நீண்ட மற்றும் செலவு கூடிய ஒன்றாகும். ஜனாதிபதியாக இருக்க விரும்பும் பலர் உள்ளனர். ஒவ்வொருவரும் அரசாங்கம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றி தங்கள் சொந்த கருத்துக்களைக் கொண்டிருப்பார்கள். இதேபோன்ற கருத்துக்கள் உள்ளவர்கள் தேர்தலுக்கு முன்பு ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சி ஆகிய இரு முக்கிய அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களாக தங்கள் பிரசாரப் பாதைகளைத் தொடங்குகின்றனர். அவர்கள் தங்கள் அணியை அமைத்து, ஆதரவிற்காக அணிதிரட்டுவதற்கும், தங்கள் பிரசாரங்களுக்கு நிதி திரட்டுவதற்கும் நாடு முழுவதும் "சுற்றுப்பயணத்தை" தொடங்குகிறார்கள்.




## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் படிமுறைகள்


**ஜனாதிபத் தேர்தல் படிநிலைகள்:**

படிநிலை 1: மாநிலங்களில் கட்சி அளவிலான தேர்தல்கள். (தங்கள் கட்சியின் ஜனாதிபதித் வேட்பாளர் யார் என்பதை இரு கட்சிகளும் முடிவு செய்யும் தேர்தல்கள்.)

படிநிலை 2: "தேர்வு செய்வோர் அவை" எனப்படும் Electoral College உறுப்பினர்களை மக்கள் தேர்வு செய்யும் பொதுத்தேர்தல்.

படிநிலை 3: தேர்வு செய்யப்பட்ட Electoral College உறுப்பினர்கள் கூடி ஜனாதிபதியைத் தேர்வு செய்யும் தேர்தல்.

ஒரு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்




முன்னர் கூறியது போல் "தேர்வு செய்வோர் அவை" எனப்படும் Electoral College அரசியலமைப்பால் நிறுவப்பட்ட ஒன்று. இது வாக்காளர்களால் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அமைப்பாகும். இது அமெரிக்காவின் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் ஒரே நோக்கத்துக்காக 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உருவாகிறது.

படிநிலை 1: மாநிலங்களில் கட்சி அளவிலான தேர்தல்கள். இத் தேர்தல்கள் கட்சிக் குழுக்கூட்டம் (Caucus), முதல்நிலை வாக்கெடுப்பு (Primaries) மற்றும் தேசிய மாநாடு மூலம் நடத்தப்படுகின்றன. இம் முதன்மைத் தேர்தல்கள் - பொதுத் தேர்தலில் ஜனாதிபதியின் வேட்பாளராக ஒருவரை தேர்ந்தெடுக்கும் சிறப்புத் தேர்தல்கள் ஆகும்.

### கட்சிக் குழுக்கூட்டம் (Caucus) மற்றும் முதல்நிலை வாக்கெடுப்பு (Pri maries) நடத்துவதற்கான காரணம்


அமெரிக்காவிலுள்ள ஐம்பது மாநிலங்களிலும் ஒரேயடியாகப் போட்டியிட நிறையப் பணம் வேண்டும். இது கட்சி வேட்பாளர்கள் தமக்குள் இடும் போட்டி என்பதால், கட்சிகள் அவர்களுக்கு நிதியுதவி செய்யமாட்டா. மேலும், முதலில் நிறைய வேட்பாளர்கள் தங்கள் கட்சியின் பொதுவேட்பாளராக வேண்டும் என்றே விரும்புவதால், அவர்களில் திறமையற்றவர், தகுதியற்றவர் வடிகட்டப்பட வேண்டும். எனவே, முதலில் சிறிய, பலவிதமான போக்குடைய மக்களும் அடங்கிய சிறிய மாநிலங்களில் அவர்கள் தத்தம் திறமை, தகுதி இவைகளை மக்களிடம் பொதுக்கூட்டங்களிலும், நேரிலும் கண்டு, பேசி, அவர்கள் ஆதரவைப்பெற்று, தங்களை நிலைநிறுத்திக் கொள்ள இப்படிப்பட்ட போட்டி உதவியாக இருக்கும். தொலைக்காட்சி நிறுவனங்களும் அவர்களுக்குள் பேச்சுப்போட்டி நடத்தி, அவர்களைப்பற்றிய விபரங்களை வெளிக்கொணர வழிசெய்யும்.

**யார் வேண்டுமானாலும் ஜனாதிபதியாக ஆசைப்படலாம், ஆனால் அதற்கான தகுதியும் திறமையும், தொலைநோக்கும் ஒரு கட்சி வேட்பாளருக்கு இருக்கிறதா? என்பதை உரசிப் பார்க்கும் நிகழ்வுகள் தான் கட்சிக் குழுக்கூட்டங்களும் (Caucus) மற்றும் முதல்நிலை வாக்கெடுப்பு (Primaries) தேர்தல்களும் ஆகும். இவை மாநில மட்டத்தில் தனித் தனியாக நடைபெறும்.**

இதில் முதலில் வரும் ஓரிருவர்களே கடைசிவரை போட்டியிடுவார்கள். பல்வேறு தனி அரசியல் பற்றுள்ள நிறுவனங்களும், தனியார்களும் வேட்பாளர்களுக்கு நிதியுதவி செய்ய முன்வருவார்கள். இவ்வாறாக கட்சிக் குழுக்கூட்டம் (Caucus) அல்லது முதல்நிலை வாக்கெடுப்பு (Primaries) மூலம் வேட்பாளர்கள் தங்களுக்கு மக்கள் மத்தியிலுள்ள ஆதரவைத் தெரிந்துகொள்ள முடியும். இம்முடிவுகள் அம்மாநிலத்து மக்களின் கருத்துகள் மட்டுமே. இவை துல்லியமானவை அல்ல. இருப்பினும் தாங்கள் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை என்று உணரும் வேட்பாளர்கள், தங்கள் கட்சியின் சார்பாகப் போட்டியிடும் மற்றவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கிக் கொள்வர். அவ்வாறாக விலக நேரும் வேட்பாளரின் பிரதிநிதிகள் மற்ற வேட்பாளர்களுக்குத் தங்களது ஆதரவை பொதுவாக போட்டியில் வெற்றி பெறுபவருக்கு தெரிவிப்பார்கள். ஆரம்பத்தில் இரு முக்கியக் கட்சிகள் சார்பிலும் பல வேட்பாளர்கள் போட்டியில் இடம் பெற்றிருந்தாலும் இறுதியில் ஒவ்வொரு கட்சி சார்பிலும் ஒவ்வொரு போட்டியாளரே எஞ்சி நின்று மோதுவர்.

(தொடரும்)

# 6 ஆயிரம் ஏக்கர் வேளாண்மை பாதிப்பு



(மட்டக்களப்பு)


மட்டக்களப்பில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் மழையினால் தாழ் நிலப்பகுதியில் உள்ள வயல் பகுதியில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் 6 ஆயிரம் ஏக்கர் வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே முகத்துவாரம்ஆற்றுவாயை வெட்டி நீரை கடலுக்கு வெளியேற்றுமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெள்ள நீரினால் மூழ்கியுள்ள எருமைத்தீவு, திமிலைத்தீவு ஆகிய வயல் பிரதேசங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக 6 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு குழுவினர் இரு நாட்களில் வழங்கும் அறிக்கையின் பின்னர் இதற்கு நிரந்தரமான தீர்வைப் பெறமுடியும் என மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## அதிகார நந்தி அனுமதி

ஒரு பெரிய அலுவலகத்துக்கு செல்கிறோம் அல்லது எப்போதும் பிசியான ஒரு பெரிய மனிதரைப் பார்க்கச் செல்கிறோம்.

நாம் நினைத்தவுடன் நாம் சென்றவுடன் உள்ளே கண்ணை மூடிக்கொண்டு நுழைந்துவிட முடியாது. அங்குள்ள முதலாளியின் தனிச் செயலாளரிடம் பேசி உரிய முறையில் அனுமதி பெற்ற பிறகே முதலாளியைப் பார்க்க அவர் அறைக்குள் செல்ல முடியும்.

ஒருவேளை அந்த தனிச் செயலாளர் அல்லது உதவியாளரை மீறி உள்ளே புக முயன்றால் அவர் நம்மை தடுத்து நிறுத்தி விடுவார். இத்தகைய சம்பவங்கள் நிகழும் போது ‘‘நந்தி மாதிரி குறுக்கே வந்து விட்டார்’’ என்று பலரும் பேசுவதைக் கேட்டு இருப்போம்.

ஆக இதில் இருந்து என்ன தெரிகிறது?

சிவாலயத்துக்கு செல்லும் நாம் அவரை வழிபட கருவறை பகுதிக்குச் செல்ல வேண்டுமானால் நந்தியிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்பது தெளிவாகிறது.

சிவாலயங்களில் பலி பீடத்தை கடந்ததும் நந்தி பெருமானை நாம் பார்க்கலாம். 24 மணி நேரமும் சிவனை பார்த்தபடி நந்தி இருப்பார். இதில் ஒரு தத்துவம் உள்ளது.

சைவம், வைணவம், கவுமாரம் உட்பட எதுவாக இருந்தாலும் அங்குள்ள மூலப் பொருளாகிய கடவுளை பார்த்தபடிதான் அவரது வாகனம் அமைந்திருக்கும். சிவன் எதிரில் நந்தி இருப்பது போல விஷ்ணு முன்பு கருடன், அம்பாள் முன்பு சிங்கம், விநாயகர் முன்பு மூஷிகம் (பெருச்சாளி), முருகன் எதிரில் மயில் என்று பிரஷ்டை செய்யப்பட்டிருக்கும்.

இந்த வாகனங்கள் அனைத்தும் ஜீவாத்மாவை குறிக்கிறது. ஜீவாத்மாவின் குறிக்கோளே பரமாத்மாவான இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட வேண்டும் என்பதுதான்.

கடவுளை சென்றடைய நமது மனம் எல்லா ஆசைகளையும் தூக்கி எறிந்து துறந்துவிட்டு 24 மணி நேரமும் சதாசர்வ நேரமும் கடவுள் நாட்டத்திலேயே இருக்க வேண்டும். இந்த எளிய தத்துவத்தைத்தான் கருவறையை நோக்கியபடி இருக்கும் நத்தி, கருடன், சிம்மம், மூஷிகம், மயில் போன்ற வாகனங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

அதனால்தான் அதிகார நந்தியை இந்து மதத்தின் முதல் குரு என்று சொல்கிறார்கள்.

நந்தி எனும் சொல்லுக்கு எப்போதும் ஆனந்த (மகிழ்ச்சி) நிலையில் இருப்பவர் என்று பொருள். நந்தியின் உருவம் சமம், விசாரம், சந்தோஷம், சாதுசங்கம் ஆகிய நான்கு ஆத்ம குணங்களை உணர்த்துகிறது.

இந்த நான்கு ஆத்ம குணங்களும் ஒரு பக்தனிடம் இருந்தால்தான் அவனுக்கு ஈசனை சச்சிதானந்த அறிகுறி வடிவமாக உணர முடியும். இதில் இருந்து நந்திபெருமான், சிவபெருமானின் அம்சமாக அவர் சாரூபம் பெற்றவராக இருப்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

இவரது அவதாரம் ஸ்ரீசைல மலையில் நிகழ்ந்தது. நூறாண்டுகளுக்கு மேல் சிவனை நோக்கி தவம் இருந்து 16 வரங்களை நந்தி பெற்றார். அதாவது உன் பாதகமலத்தில் என்றென்றும் இருக்க வேண்டும் என்று வரம் பெற்றார்.

நந்தியின் நல்ல உள்ளத்தை கண்ட ஈசன், அவருக்கு சிவாலயத்தில் எல்லா அதிகாரத்தையும் கொடுத்தார். அதனால் தான் அவருக்கு அதிகார நந்தி என்ற பெயர் ஏற்பட்டது.

இந்த உயர்ந்த அதிகாரத்தைப் பெற்றது மட்டுமின்றி இறைவனிடம் இருந்து சிவாகமங்கள் அனைத்தையும் கற்றார். பிறகு அந்த சிவாகமங்களை நந்தி நமக்கு அருளினார் என்பார்கள்.

இந்த அடிப்படையில் பார்த்தால் அவர் குருவாக மட்டுமின்றி ஆலயத்துக்கு காவல்காரர் போல கம்பீரமாக இருப்பது புரியும். இன்னொரு வகையில் பார்த்தால் ஈசன் போலவே இவருக்கும் நெற்றிக்கண் உண்டு. மான், மழு எல்லாம் உடையவர்.

இவர் கைகளில் பொன் பிரம்பை ஏந்தி காவல் செய்கிறார். இதனால் “நாம் குரு மரபுக்கெல்லாம் முதல் குரு நாதன்” என்று நந்தியெம்பெருமானை திருமூலர் புகழ்ந்து பாடியுள்ளார். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## மெனிங் சந்தை பேலியகொடவுக்கு

(கொழும்பு)

புறக்கோட்டை, மெனிங் சந்தையை தற்காலிகமாக பேலியகொடவுக்கு இடமாற்றம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. மெனிங் சந்தை மூடப்பட்டதன் விளைவாக தங்கள் விளை பொருட்களை விற்க முடியாதமையால் விவசாயிகள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு தீர்வாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி அரச பொறியியல் கழகத்திற்கு சொந்தமான நிலம் இந்த நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து மெனிங் சந்தை திங்களன்று மீண்டும் மூடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## 401 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 401 இலங்கையர்கள் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 50 பேரும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு வேலை வாய்ப்புக்காகச் சென்ற 275 பேரும் ஐ.நா. அமைதி காக்கும் படைகளில் பணியாற்றுவதற்காக பல்வேறு ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்ற 76 இலங்கை இராணுவ வீரர்களும் எதியோப்பிய எயார்லைன்ஸ் மூலமாக நாட்டை வந்தடைந்தனர். இவ்வாறு விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர்.சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து அவர்கள் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஜ-4)

## கொன்சியுலர் பிரிவு மீண்டும் திறப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் ஒரு மாதமாக தற்காலிகமாக மூடப்பட்ட, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியுலர் பிரிவு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை முதல் இந்த அலுவலகம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இங்கு சுகாதார விதிமுறைகளுக்கு அமைய, பிறப்புச் சான்றிதழ், கல்வி தகுதிச் சான்றிதழ்கள் என்பவற்றை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 140 |
| தக்காளி | 80 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 90 | 60 |
| கோவா | 60 | 100 | 120 |
| கரட் | 100 | 190 | 200 |
| பூசணி | 60 | 50 | 70 |
| புடோல் | 50 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 220-300 | 320 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 180 |
| பாகற்காய் | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 120 | 130 | 160 |
| லீக்ஸ் | 60 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 180 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 200 |
| போஞ்சி | 150 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 120 | 100 |
| கீரை – 1 பிடி | 40 | 30 | 50 |
| தேசிக்காய் | 200 | 200 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 65-75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 220 | 240 |
| வெங்காயப்பூ | 250 | -- | — |
| முள்ளங்கி | 60 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 40 |
| ஈரப்பலா | 60 | -- | 120 |



# சிறுவர் அரங்கம்

## கொக்குக்கு எத்தனை கால்கள்

ஒரு வீட்டில் வீட்டு உரிமையாளரும், அவருக்குத் துணையாக ஒரு சமையல்காரரும் இருந்தனர். ஒரு நாள் வீட்டுக்காரர் கொக்கு ஒன்றை வாங்கிவந்து சமையல்காரரிடம் கொடுத்து கொக்கு குழம்பு வைக்குமாறு சொன்னார்.

சமையல்காரர் குழம்பு வைத்ததும், குழம்பையும் சிறு அளவு கறியையும் சுவைப் பார்க்கலாம் என்று கால் துண்டு ஒன்றை முழுவதும் சாப்பிட்டு விட்டார்.

பின்பு சோறு பரிமாறப் பட்டதும், வீட்டுக்காரர் சாப்பிட ஆரம்பித்தார். சமையல்காரர் முதலாளிக்குப் பிடித்த கொக்கின் கால் ஒரு துண்டை முதலில் எடுத்து வைத்தார். இன்னொரு கால் துண்டையும் வை என்றார் முதலாளி.

கொக்கிற்கு ஒரு கால் தானுங்க முதலாளி என்றார் சமையல்காரர். கொக்கிற்கு இரு கால்கள் இருக்குமே? என்றார் முதலாளி.

இல்லீங்க ஒரு கால் தானுங்க என்றார் சமையல்காரர். முதலாளி எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் சமையல்காரர் ஒப்புக் கொள்ளவில்லை.

முதலாளி சாப்பிட்டு முடித்ததும் சமையல்காரரை வயல்வெளிக்கு கொக்கு காட்ட அழைத்துச் சென்றார்.

வயலில் ஒரு கொக்கு ஒரு காலை மடக்கிக் கொண்டு ஒற்றைக் காலுடன் நின்று கொண்டிருப்பதை பார்த்த சமையல்காரர் பாருங்க முதலாளி, கொக்குக்கு ஒற்றைக் கால்தான் என்று முதலாளியிடம் காட்டினார்.

உடனே முதலாளி தன்னுடைய இரு கைகளையும் தட்டினார். சப்தம் கேட்டதும் கொக்கு தனது இரு கால்களையும் மடக்கி கொண்டு பறக்க ஆரம்பித்தது.

பார், கொக்கிற்கு இரு கால்கள் என்று சமையல்காரரிடம் காட்டினார் முதலாளி.

நீங்க இப்ப கை தட்டியதற்கு பதிலாக, சாப்பிட ஆரம்பிக்கும்போதே கை தட்டியிருந்தால் கொக்கிற்கு இரு கால்கள் வந்திருக்குமே என்றாராம் சமையல்காரர்.



# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஆசான் அரிஸ்ரோட்டில்

22



லெஸ்வோஸ் தீவு

இதற்காகக் கடவுளுக்கு எத்தனை நன்றிகள் சொன்னாலும் தகும்.

தங்களுடைய உயர்வான போதனைகளைக் கற்று தங்களுடைய சீடனாக வளர்ந்தால்தான் நாட்டை ஆளும் நல்ல தகுதிகளை அவனால் பெற்றுக்கொள்ள முடியும் என்பது அடியேனுடைய நம்பிக்கை.

தாங்கள் அடியேனுடைய இருப்பிடத்துக்கு வரவேண்டும் என்பது என்னுடைய விருப்பம். நன்றியுடனும் எதிர்பார்ப்புடனும் இரண்டாம் பிலிப், மாசிடோனிய மன்னர்.

கேள்விக்குறியோடு வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்த அரிஸ்ரோட்டிலுக்கு மன்னரின் அழைப்பு ஊக்கத்தைக் கொடுத்தது. உடனே புறப்பட்டு மன்னர் பிலிப்பின் அரண்மனைக்கு வந்தார்.

மகிழ்ச்சியில் மூழ்கிப் போனார் மன்னர். தடல்புடலான வரவேற்பு. பக்குவமான உபசரிப்பு. அரிஸ்ரோட்டிலுக்கு மகிழ்ச்சி.

தாங்கள் தங்குவதற்கு என்னுடைய அரண்மனையிலேயே பிரமாண்டமான அறையை ஒதுக்கியிருக்கிறேன்.

மன்னர் பேசி முடிப்பதற்காகக் காத்திருந்தவர் போல எடுத்த எடுப்பிலேயே தன்னுடைய விருப்பமின்மையைத் தெரிவித்தார் அரிஸ்ரோட்டில்.

மாண்புக்குரிய மன்னரே, எனக்கு இந்த மாடமாளிகையில் தங்கியிருக்க விருப்பமில்லை. ஏன்? இங்கு என்ன குறை? சொல்லுங்கள். நொடியில் சரி செய்து விடுகிறேன். ஊருக்கு வெளியே அகாடமியைக் கட்டிக் கொள்கிறேன். அங்கு வைத்தே அலெக்சாண்டருக்குப் பாடம் சொல்லித் தருகிறேன்.

மறுக்க மனமில்லாமல் ஒப்புக்கொண்டார் மன்னர் பிலிப். அத்தோடு விட்டுவிடாமல் அகாடமி வைத்துக்கொள்ள வசதியாக இடம் ஒன்றையும் கொடுத்தார்.

மீசா என்கிற நகரில் இருக்கும் நிம்ப்ஸ் என்கிற ஆலயத்தில் மன்னர் பிலிப்பின் அனுமதியோடு அகாடமி தொடங்கப்பட்டது. உடனடியாக பாடம் சொல்லிக் கொடுக்கும் பணியும் ஆரம்பமானது.

மற்ற மாணவர்களோடு சேர்ந்து அலெக்சாண்டரும் அகாடமிக்குச் சென்று படிக்கத் தொடங்கினான். அப்போது அலெக்சாண்டருக்கு வயது சரியாகப் பதின்மூன்று அகாடமியில் பாடம் படிக்கும்முறை கொஞ்சம் வித்தியாசமாக இருக்கும்.

(தொடரும்)

ஊக்கம் என்பது உண்மையில் ஒரு மந்திரச் சொல்தான். ஜெப்வின் என்பவர் ஏர்ஷிப் என்ற வானவெளிக்கப்பலை 58 வயதில் தான் கண்டுபிடித்தார்.
– *காஸோபஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# அரச காணிகளுக்கு நம் இளைஞர்கள் விண்ணப்பிக்க வேண்டும்

வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதர்களிடம் சென்று உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன? என்று கேட்டால்; அவர்கள் கட்டாயமாகக் கூறுவது சந்தர்ப்ப சூழ்நிலைகளைச் சாதகமாகப் பயன்படுத்தினோம் என்பதாகும்.

ஆக, சந்தர்ப்ப சூழல்களை பயன்படுத்துவதென்பது மிக மிக முக்கியமானது.

எனினும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துவதில் நம் தமிழினம் மிகப் பலவீனமாக உள்ளதென்பது மறுதலிக்க முடியாத உண்மை.

இன்று இனப்பிரச்சினையூடாக நம் இனம் அனுபவிக்கின்ற அத்தனை துன்பங்களுக்கும் பின்னால், நம் முன்னோர்கள் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தத் தவறியமையே காரணமாகும்.

எனவே எம் இனம் பின்னிலையில் நிற்பதற்குக் காரணமாக இருக்கின்ற விடயத்தைத் தொடர்ந்தும் நாம் செய்யக்கூடாது என்பதில் எம் இனம் விழிப்பாக இருக்க வேண்டும்.

இப்போதெல்லாம் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு அரச காணிகளை வழங்குகின்ற வேலைத்திட்டமொன்று நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக இளம் தொழில் முயற்சியாளர்களிடம் இருந்து (45 வயது) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனினும் இது தொடர்பில் வடபகுதியிலுள்ள தமிழ் இளைஞர்கள் விண்ணப்பிக்கவில்லை அல்லது மிகக் குறைந்த அளவினரே விண்ணப்பித்துள்ளனர் என அறிய முடிகிறது.

இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு அரச காணிகளை வழங்குகின்ற செயற்றிட்டம் பற்றிய தகவல்கள் நம் இளைஞர்களைச் சென்றடையவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

எதுஎவ்வாறாயிருப்பினும் நம் அரச அதிகாரிகள் இது விடயத்தில் தகவல் பரப்புரை செய்வதானது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்கும் எங்கள் மண்ணை எங்கள் இளைஞர்களின் தொழில் முயற்சிகளுக்கு உரித்தாக்குவதற்கும் உதவுவதாக இருக்கும்.

ஆகவே அரச காணிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லையை இன்னும் சில தினங்களேனும் நீடிப்புச் செய்ய வேண்டும்.

அதேநேரம் நம் தமிழ் இளைஞர்கள் அரச காணிகளுக்கான விண்ணப்பங்களை விரைவாக அனுப்பி வைப்பதில் கவனம் செலுத்தி, வாய்த்த சந்தர்ப்பத்தைக் கொண்டு நம் வாழ்வை வெற்றியாக்குவோம்.

# கல்வி அமைச்சின் அறிவிப்பு

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையிலான இசட் புள்ளிகள் மீளாய்வு செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெற்கு ஊடகமொன்றுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இசட் புள்ளி வெளியீட்டுடன் புதிய மற்றும் பழைய பாடத் திட்டங்களின் அடிப்படையில் பரீட்சைக்கு தோற்றிய மாணவ மாணவியர் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த இசட் புள்ளிகளை மீளாய்வு செய்வதற்கு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

புதிய பாடத்திட்டம் பழைய பாடத்திட்டம் என்பவற்றில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான இசட் புள்ளி வழங்கும் போது எவ்வாறான நடைமுறைகள் பின்பற்றப்பட்டன என்பது குறித்து ஆராயப்படவுள்ளதாக பேராசிரியர் கபில பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை பத்தாயிரத்தைக் கடந்தது

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்தை கடந்துள்ளது.

நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 183 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை கொரோனாத் தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 350 ஆக காண்ப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 121 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 493 பேர் கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பிலுள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றினால் நேற்று மேலும் ஒரு உயிரிழப்பு உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் இதுவரை 46 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மன்னாரில் விவசாயச் செய்கை தொடர்பில் விரிவாக ஆராய்வு

(மன்னார்)

கட்டுக்கரைக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நெற் பயிர்ச் செய்கை தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன்னார் பதில் அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தலைமையில் இடம் பெற்றது.

அதன்போது விவசாய அமைப்புக்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கட்டுக்கரைக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பெரும் போக நெற்பயிர்ச் செய்கை தொடர்பில் ஆராயும் கூட்டம் கடந்த மாதம் 19 ஆம் திகதி இடம் பெற்றது.

குறித்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியாத சூழ் நிலையில், தொடர்ச்சியாக வரட்சிநிலை காணப்பட்டது.

இதனால் விவசாயிகள் விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த நிலையில், அவற்றை தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்டது.

இந்தநிலையில் நேற்று மீளாய்வுக் கூட்டம் இடம் பெற்றது.

விவசாய மக்களின் கோரிக்கைகளுக்கு அமைவாகவும், நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளர் மற்றும் பொறியியலாளர்களின் ஆலோசனைகளுக்கு அமைவாகவும் திகதியில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைவாக வாய்க்கால் துப்புரவு செய்து நீர் விநியோகிக்கின்ற நாளாக நாளைய நாள் அமையும்.

கால்நடைகள் கடந்த மாதம் 26 ஆம் திகதி முதல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நெல் அறுவடையாக அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி இறுதி அறுவடை இடம் பெறும்.

இதன் போது கால்நடைகளை மீளக்கொண்டு வரும் நாளாக எதிர் வரும் மே மாதம் முதலாம் திகதி அமையும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக உரிய காலப்பகுதிக்குள் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே குறித்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக அதனை பின்பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தீர்மானங்களை பின்பற்றாத விவசாயிகள் தொடர்பாக உரிய அமைப்புக்கள் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தீர்மானிக்கப்பட்டது. (ஜ-4)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

**"கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடைவிடாத முயற்சிகளே மரங்கள்."**

*- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)*

# சத்திய தரிசனம்



## படித்தாலும் பண்பு குறையலாமா?

❖ சீதை, அனுசூயா போன்ற புராணகாலப் பெண்களை வாழ்வின் வழிகாட்டியாகப் பின்பற்ற வேண்டும். வேதகாலத்தில் பெண்கள் கல்வியறிவு பெற்றிருந்தாலும் குடும்பப் பொறுப்பைப் புறக்கணிக்கவில்லை.

❖ கல்வியறிவு பெற்ற பெண்கள், நம் பண்பாட்டை கெடுத்து விடக் கூடாது. கற்ற கல்வியால் விவேகம் உள்ளவர்களாகவும், நல்லது கெட்டதைப் பகுத்தறியும் புத்திசாலிகளாகவும் திகழ வேண்டும்.

❖ ஆண்களைப் போல பெண்களும் கல்விகற்பது நல்லவிஷயம் தான் என்றாலும் கட்டுப்பாடற்ற சுதந்திர உணர்வுடன் இருக்க நினைப்பது சரியானதல்ல.

❖ சமுதாயத்தின் அடிப்படை அஸ்திவாரமே குடும்பம் தான். குடும்பம் என்னும் கட்டமைப்பே நல்ல சமுதாயத்தை உருவாக்குகிறது. ஆன்மிகப் பொக்கிஷத்தைப் பாதுகாக்கும் பெட்டகங்களாக பெண்கள் திகழ வேண்டும்.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 15.11.2020-13.11.2021

# நான்கில் வந்தது குரு பகவான், நலம்பெறக் கவனம் மிகத்தேவை!

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**துலாம் இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 15.11.2020 அன்று நான்காமிடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். 4ஆம் இடத்தை 'அர்த்தாஷ்டம ஸ்தானம்' என்று சொல்வது வழக்கம். எனவே ஆரோக்கியத் தொல்லைகளும், மனக்கவலைகளும் அதிகரிக்கும். குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்பட்டு நிம்மதிக் குறைவு உருவாகும். சொந்தம், சுற்றங்களின் பகைகளை வளர்த்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளுங்கள். தொழிலில் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். வெளிநாடு சென்று வேலை பார்ப்பவர்கள், வேலையின்மை காரணமாக சொந்த ஊருக்கு திரும்ப நேரிடும். வாகனங்களில் செல்லும் பொழுதும் கவனம் தேவை. இடையில் சில மாதங்கள் குரு பகவான் 5 ஆம் இடத்திற்குச் செல்கின்றார். அப்பொழுது நற்பலன்கள் ஏற்படும். குரு வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலமிழந்தவர்கள், வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருவை வழிபடுவது நல்லது.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக, குரு பகவான் உங்கள் இராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களை பார்க்கப் போகின்றார். குரு பகவான் இருக்குமிடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்கே பலன் அதிகம். அந்த அடிப்படையில் குரு பார்வை அஷ்டம ஸ்தானத்தில் பதிவதால், புதிய வாய்ப்புகள் வந்து சேரும். 'அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்' என்று சொன்ன மருத்துவர்கள், சாதாரண சிகிச்சையிலேயே குணமாக்கிவிடுவர். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகவான் பகைக் கிரகமாவார்.

அந்த குரு நீசம் பெற்று பார்ப்பதால், அந்த பார்வைக்கு நல்ல பலன்கள் அதிகம் கிடைக்கும். இதற்கு நீங்கள் தொடர்ந்து குருவை வழிபட வேண்டும். அஷ்டம ஸ்தானத்தை குரு பார்ப்பதால் தொழிலில் புதிய கூட்டாளிகள் இணைவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இட மாற்றங்கள் உறுதியாகலாம்.

குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் செயல் ஸ்தானம் புனிதமடைகின்றது. முடங்கிக் கிடந்த தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். 'தொழிலை விரிவு செய்ய வங்கிகளிலும் கடன் கிடைக்கவில்லை, வள்ளல்களிடமும் கடன் கிடைக்கவில்லை' என்று நினைத்தவர்களுக்கு, இப்பொழுது நல்ல பதில் கிடைக்கப்போகின்றது. அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு, புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். புதிய ஒப்பந்தங்களில் யோசித்து கையெழுத்திடுவது நல்லது.

குருவின் பார்வை 12ஆம் இடத்தில் பதிவதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள், திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள். பழைய நகைகளை மாற்றி புதிய நகைகளாக வாங்கச் சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த அனுகூலத் தகவல் உண்டு. உத்தியோகத்தில் நீண்ட தூரத்திற்கான மாறுதல் ஒருசிலருக்கு கிடைக்கலாம்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

**உத்தராடம் நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் குரு சஞ்சாரம் (15.11.2020 முதல் 04.01.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்திற்கு அதிபதியாக விளங்குபவர் சூரியன். அதாவது லாபாதிபதி. அவரது சாரத்தில் குரு வலம் வரும்பொழுது, தொழிலில் லாபம் இரு மடங்காக உயரும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். கிளைத்தொழில் தொடங்கும் முயற்சியில் ஒருசிலர் ஆர்வம் காட்டுவர்.

ஒப்பந்தங்கள் தேடி வரும். இருப்பினும் அவற்றை 'உரிய காலத்தில் நிறைவேற்ற முடியுமா?' என்று ஆராய்ந்து, அதன்பிறகு கையெழுத்திடுவது நல்லது. மூத்த சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். கௌரவப் பதவிகள் ஒருசிலருக்கு கிடைக்கலாம். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். கூட்டு முயற்சியில் இருந்து விலகித் தனித்து இயங்க முற்படுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள், விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**திருவோணம் நட்சத்திரக்காலில் சந்திரன் சாரத்தில் குரு சஞ்சாரம் (05.01.2021 முதல் 01.03.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு அதிபதியாக விளங்குபவர் சந்திரன். அவரது சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளம் சிறப்பாக இருக்கும். துணிந்து சில முடிவுகளை எடுத்து ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். 'வியாபாரத்தை விரிவு செய்ய நண்பர்களை கூட்டாகச் சேர்த்துக் கொள்ளலாமா?' என்று யோசிப்பீர்கள். அன்பு நண்பர்கள் ஆதரவுக்கரம் நீட்டுவர். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட சலுகைகள் உங்களுக்கு




கிடைக்கும். ஒரு சிலருக்கு இப்பொழுது பணி நிரந்தரமாகி நிலையான வருமானத்திற்கு வழிகிடைக்கும்.

**அவிட்டம் நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (02.03.2021 முதல் 04.04.2021 வரை, மீண்டும் 14.09.2021 முதல் 13.11.2021 வரை)**

இக்காலத்தில் குரு பகவானின் சஞ்சாரம் மிகச்சிறப்பாக இருக்கின்றது. உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்களுக்கோ, உங்கள் உடன் பிறந்தவர்களுக்கோ, திருமண வாய்ப்பு கைகூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தனவரவு தாராளமாக வந்து சேரும். எனவே எந்தக் காரியத்தைச் செய்ய நினைக்கிறீர்களோ, அதை அந்த நேரத்தில் செய்ய இயலும். கொடுக்கல்-வாங்கல்கள் திருப்தி தரும். உதாசீனப்படுத்தி விலகிச்சென்ற உறவினர்கள் ஓடிவந்து ஒட்டிக்கொள்வர். குடும்ப முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், கூடுதல் சம்பளம் கிடைக்குமிடத்தில் வேலை செய்ய முயற்சிப்பர். நட்பால் நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும்.

**அவிட்டம் மற்றும் சதயம் நட்சத்திரக்காலில் செவ்வாய் மற்றும் ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (05.04.2021 முதல் 13.09.2021 வரை)**

இக்காலத்தில் கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கப் போவதால், அவர் 9-ம் பார்வையாக உங்கள் இராசியைப் பார்க்கப்போகின்றார். 'ஐந்தும், ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும்' என்பதால், இக்காலத்தில் பணப்புழக்கம் சரளமாக இருக்கும். கும்ப குருவின் ஆதிக்க காலத்தில் பொன், பொருட்கள் சேரும். புகழ்கூடும்.

உடல் நலம் சீராகும். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த அனுகூலத் தகவல் வந்து சேரும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். வசதிகள் பெருகும் நேரமிது. தொழில்முன்னேற்றம் உண்டு. கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

**குருவின் வக்கிர இயக்கம்**

16.06.2021 முதல் 13.10.2021 வரை குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். கும்பம், மகரம் ஆகிய இரண்டு இராசிகளிலும் வக்கிரம் பெறுகின்றார். இக்காலம் ஒரு இனிய காலமாகும். எதைச் செய்தாலும் அதில் வெற்றி கிடைக்கும். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகவான் பகைக்கிரகம் என்பதால், அது வலிமை இழக்கும் இந்த நேரம் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களின் அனுகூலத்தோடு வருங்காலத்தை நலமாக்கிக் கொள்வீர்கள்.

பணிபுரியும் இடத்திலிருந்த பிரச்சினைகள் படிப்படியாக மாறும். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைந்து பொருளாதாரத்தை பெருக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். மறைமுகப் பகை மாறும். தொழில் செய்யுமிடம் வாடகை செலுத்துமிடமாக இருந்தால், அதை விலை கொடுத்து வாங்குமளவிற்கு உங்களுக்கு வளர்ச்சி ஏற்படும். திருமணத்தடை அகலும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் குரு பகவான் படம் வைத்து முல்லைப்பூ மாலை சூட்டி, கவசப் பாராயணங்களை படித்தால் காரியங்களில் வெற்றி கிடைக்கும். மேலும் வெள்ளிக்கிழமை சுக்கிரனுக்குரிய துதிப்பாடல்களை பாடி வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு, சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறும் நேரமிது. கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். உடல்நலத்தில் கவனம் செலுத்துவது நல்லது. ஊர் மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றங்கள் தானாக வந்து சேரும். குடியிருக்கும் வீட்டால் ஒருசிலருக்கு பிரச்சினைகள் உண்டு.

கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உறவினர் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டாம். தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளு கூடும். குலதெய்வ வழிபாடு குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(தொடரும்)

## கிளிநொச்சியில்...

சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்றிருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ள தாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையின் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

மேற்படி நபர் கொழும்பில் தொழில் புரிந்து வீடு திரும்பிய நிலையில் யூனியன் குளம் பகுதியில் தனிமைப்படுத்தப்பட் டிருந்தார். (ம-18)

## கொரோனா பர...

கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 542 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்தைக் கடந்து 15 ஆயிரத்து 350ஆக அதிகரித்துள்ளது. (ம)

## அரச காணி...

முயற்சியாளர்கள் மேற்படி சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயன்பெறுமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளது.

காணி முகாமைத்துவ அலுவல்கள் அரச தொழில் முயற்சி காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு இளம் தொழில் முயற்சியாளர் களை ஊக்குவிப்பதற்காக அரச காணி களில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங் கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மேற்படி அறி வுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

45 வயதுக்கு உட்பட்ட யாரும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

வேறு தொழில் செய்து கொண்டே அரச காணிகளில் புதிய தொழில் முயற்சி களை ஆரம்பிக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் அரச காணிகள் மிகக் குறைவு என்பதனால் மாந்தை கிழக்கு, மேற்கு, துணுக்காய், முல்லைத் தீவு, வவுனியா வடக்கு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு, மாங் குளம் போன்ற இடங்களை தெரிவு செய்வ தன் மூலம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படாமல் இருக்கும்.

இளம் முதலீட்டாளர்களை நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செய லகத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (ம)

## கொழும்பில்...

இதனடிப்படையில் அண்ணளவாக நூற்றுக்கு 5 வீதமாக தொற்றாளர்கள் இனங் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

அந்த விகிதாசாரத்தின் அடிப்படையில் 30 ஆயிரம் பேர் வரையில் வைரஸ் தொற்றுடன் இருக்கலாம் எனவும் குறிப்பிட் டுள்ளார்.

எனினும் குறித்த தொற்றாளர்களிட மிருந்து தொற்றுப் பரவுகின்றதா? அல்லது உடலிலே உள்ளதா? என்பதைத் தீர் மானிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார். (ம)

## மேல் மாகாண...

எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள் ளார்.

இந்நிலையில், உடன் அமுலுக்கு வரும் வகையில் தற்போது முதல் எதிர் வரும் 15ஆம் திகதி வரை மேல் மாகா ணத்தில் இருந்து எந்தவொரு நபரும் வெளியேற முடியாது என இராணுவத் தள பதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற கொரோனா தடுப்பு தொடர் பான செயலணி உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு பணித்திருந்தார்.

மேலும், கொரோனா வைரஸ் பரவு வதைத் தடுக்க பயணக் கட்டுப்பாடுகள் அவசியம் எனவும் தற்போது முடக்கப்பட் டிருக்கும் பகுதிகளுக்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ எந்தவொரு நபரையும் அனுமதிக்க வேண்டாம் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (ம)

## 5 பேர் உயிரிழப்பு...

1. கொழும்பு-11 பகுதியை சேர்ந்த 40 வயதான ஆண் ஒருவர் கோவிட் 19 தொற்றால் உயிரிழந்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் உயிரிழந்ததுடன் பின்னர் அவருக்கு மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போதே கோவிட் - 19 தொற்றுறுதியாகியுள்ள தாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

2. அத்துடன் களனி பகுதியை சேர்ந்த 45 வயதான ஆண் ஒருவரும் கோவிட்-19 தொற்றால் மரணமாகியுள்ளார்.

கடந்த முதலாம் திகதி அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டி ருந்த நிலையில் கோவிட் - 19 தொற்றால் ஏற்பட்ட மாரடைப்பால் அவர் உயிரிழந்த தாக தெரிய வந்துள்ளது.

3. அதேநேரம் பாணந்துறை பகு தியைச் சேர்ந்த 80 வயதான ஆண் ஒரு வரும் கோவிட் - 19 தொற்றால் மரணமாகி யுள்ளார்.

4. மேலும் இம்புல்கொட பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவரும் கோவிட் - 19 வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

மற்றும் 68 வயதுடைய மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளார்

இவர் மஹரகம அபேக்ஷா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளதாகவும், இதனையடுத்து மேற் கொள் ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போது இவருக்கு கொரோனா தொற்று ஏற்பட் டுள்ளமை உறுதி செய்யப்பட் டுள்ளதாகவும் அர சாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக் கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ம)

## குடும்...

மூன்று பிள்ளை களின் தந்தை ஒரு வர் சடலமாக மீட் கப்பட்டுள்ளார்

இவ்வாறு சடல மாக மீட்கப் பட்டவர் 41 வயதுடைய மாரிமுத்து சுதா கரன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார்

நேற்றுக் காலை வயலில் வரம்பு வெட்டிக் கொண்டி ருந்த வேளை இவர் வயலில் வீழ்ந்து உயிரிழந் துள்ள தாக இவரது உற வினர்கள் தெரிவித் துள்ளனர். (ம-281)

## போக...

சிகிச்சை மையத் திற்கு அனுப்பப்பட்ட னர்.

தும்பர சிறைச் சாலையில் ஒரு சந் தேக நபருக்கும் கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள் ளது. (ம)

### மெகா பவர்

திகதி 11/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0670
வெற்றி எழுத்து L | சுப்பர் இலக்க 15 | வெற்றி இலக்கங்கள் 37 51 56 64

### செவண

திகதி 11/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 312
ஆங்கில எழுத்து M | வெல்லப்பட்ட இலக்கங்கள் 06 12 16 32

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 11-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2598
ஆங்கில எழுத்து L | வெற்றி இலக்கங்கள் 04 14 21 34
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2020/11/11
சீட்டிழுப்பு இலக்கம் 4303
ஆங்கில எழுத்து S | வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 9 5 7 9 8
தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 11-11-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1071
ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கங்கள் 5 6 1 2 1 0
தேசிய லொத்தர் சபை

### ராசி

சுப்பர் ஜக்பொட் 49,96,844/=
திகதி : 11.11.2020
வெற்றி வாரம் : 2980
வர்ணம் : பச்சை
வெற்றி இலக்கங்கள் 08 31 49 53 தனுசு
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,596,180

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1273 | நிறம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 11.11.2020 | தினம் புதன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் X 05 41 58 77
SUPER 500 விசேட இலக்கம் 6 6 0 6
அபிவிருத்தி லொத்தர் சபை

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 25
சீட்டிழுப்பு திகதி 11/11/2020
வெற்றி இலக்கங்கள் 10 30 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,417,540/=
நீலம், செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1706
சீட்டிழுப்பு திகதி 11/11/2020
வெற்றி இலக்கங்கள் 03 38 45 64 ஆங்கில எழுத்து Y
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 55,851,312
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

### அத கோடிபதி ADA KOTIPATHI

புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1099
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.11.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 83,301,220/-
வெற்றி இலக்கங்கள் 08 29 64 71 ஆங்கில எழுத்து X
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா Shanida

புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.11.11
சீட்டிழுப்பு இல. : 3429
வர்ணம் : ஊதா
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,772,338.20
வெற்றி இலக்கங்கள் 18 39 41 68 ஆங்கில எழுத்து P
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 9125
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


—வெற்றி— —மகிழ்ச்சி—

சீட்டின் விலை இருபது ரூபா




பரிசு தொகை பத்து லட்சம் ரூபா

மீண்டும் ஓர் லட்சாதிபதி
10 லட்சம்
Rs. 1,000,000/=
வெல்லப்பட்டுள்ளது.
எமது விற்பனையில்
10-11-2020 செவ்வாய்க்கிழமை
அபிவிருத்தி லொத்தர் சபையின் (DLB)
சுப்பர் போல் (19-24-33-73)
நான்கு இலக்கங்களும் பொருந்தியதில்
சுப்பர் பரிசு பத்து லட்சம்
வெல்லப்பட்டுள்ளது.

"மிகவும் சிறிய முதல் இருபது ரூபாவில் வாழ்வை வளமாக்குவோம்."
28.12.2019 NLB ஜாதிக சம்பத ரூபா 20 லட்சம் வெல்லப்பட்டது.
29.02.2020 NLB ஜாதிக சம்பத ரூபா 20 லட்சம் வெல்லப்பட்டது.

அதிர்ஷ்ட இல்லம்

DLB 09-9060
NLB N220063

நடராஜா வசீகர்
(பிரதான முகவர், சுன்னாகம்)
(2013ஆம் ஆண்டு "DLB" யின் ராசி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் "ஜக்பொட்" பரிசான 58 லட்சம் ரூபாவை வெற்றி கொண்ட "ஜக்பொட் விற்பனை முகவர்" வ.நடராஜா)
(C-666)
ஒன்றாவது வாங்குவோம் என்றாவது வெல்வோம்

# பருத்தித்துறையில் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை பகுதியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து 3 கிலோ கிராம் கஞ்சாவும், ஒரு தொகை ரொக்கப்பணமும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை பகுதியில் கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக காங்கேசன்துறை விசேட குற்றப்புலனாய்வு துறையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று புதன்கிழமை மாலை 5 மணியளவில் காங்கேசன்துறை விசேட குற்றப் புலனாய்வு பிரிவினர் அப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அப்பகுதி ஊடாக பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றை மறித்து சோதனையிட்ட போது ஆசனத்தின் கீழ் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3 கிலோ 315 கிராம் எடையுடைய கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது

அவரிடமிருந்து சில தொகை ரொக்கப் பணமும் மீட்கப்பட்டுள்ளது. (ம-60)

# பிள்ளையானை சிறைச்சாலையிலிருந்து அழைத்துவர முடியும் என்றால்

## ஏன் அரசியல் கைதிகளுக்கு முடியாது? சிவாஜிலிங்கம் கேள்வி

(யாழ்ப்பாணம்)

பிள்ளையானைச்சிறைச்சாலையிலிருந்து பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டு அபிவிருத்தி அலுவலகத்தை திறக்க முடியுமாக இருந்தால் ஏன் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாது என சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்படி கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு அலுவலக திறப்பு விழாக்காக மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

இந்த நிலைமை ஏன் தமிழ் அரசியல் கைதிகள் மீது காட்டப்படக்கூடாது என சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசாங்கத்தினுடைய ஆட்களுக்கு ஒரு நீதியும் ஏனையவர்களுக்கு ஒரு நீதியுமாக இந்த அரசு செயற்படுவதாக குற்றச்சாட்டியுள்ள சிவாஜிலிங்கம் எனினும் இவ்வாறான சம்பவங்களை அரசு நிறுத்துவதோடு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ம)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், நாயன்மார்க்கட்டு கனகரெத்தினம் வீதியில் றோட்டுடன் 25 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
(4629)
077 288 0152, 077 623 4204

**முழுநேர மற்றும் பகுதிநேர வேலை வாய்ப்பு**

முன்னணி நிறுவனத்திற்கு இடர் சூழலைக் கருத்திற் கொண்டு அடிப்படைச் சம்பளத்துடன் கூடிய வேலை வாய்ப்பு.
- கல்வித் தகைமை : O/L, A/L
- வயது எல்லை : 25 - 45
- வடமாகாணத்தின் எப்பாகத்திலிருந்தும் விண்ணப்பிக்கலாம்.

(C-669)
தொடர்புகளுக்கு : 077 076 0115

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், ராச வீதியில் 6 பரப்புக் காணி (மெயின் றோட்டுடன்) விற்பனைக்கு உண்டு.
பிரித்தும் கொடுக்கப்படும்.
யாழ்ப்பாணம், நீர்வேலி, கரந்தன் குறுக்கு வீதியில் 2 பரப்பு, 3 குளி காணி (ராசா கடை அருகாமை) விற்பனைக்கு உண்டு. மற்றும் 44 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
(4629)
077 805 1655, 076 640 0974

**உடனடி வேலை வாய்ப்பு**

யாழ். நகரில் இயங்கும் பிரபல கல்வி நிலையம் ஒன்றிற்கு **வரவேற்பாளர்**, **கணனி தட்டச்சு** வேலைகளுக்கு 30 வயதிற்குட்பட்ட பெண்கள் தேவை.
தொடர்புக்கு
(4627)
077 389 8726, 070 171 0061

YMCA
JAFFNA
ESTD : 1890

யாழ். வை.எம்.சீ.ஏ (YMCA) கட்டடத் தொகுதியில் இரண்டாவது மாடியில் அமைந்துள்ள 33" X 31" அளவு கொண்ட கடை (A9 வீதியில் ) 01.01.2021 தொடக்கம் குத்தகைக்கு கொடுக்க கேள்விக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது. மேலதிக விபரங்களை YMCA இல. 109, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
(C-663)
பொதுச் செயலாளர்,
YMCA, யாழ்ப்பாணம்.
விண்ணப்ப முடிவுத் திகதி
20.11.2020

**காணி விற்பனைக்கு**
**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், மானிப்பாய், உடுவில் றோட்டுடன் ஆனந்த வைரவர் கோவில் சந்திக்கு அருகாமையில் ஆறு பரப்புக் காணி உள்ளது. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
இரண்டு பரப்புக் காணியுடன் வீடும் உள்ளது. ஒரு பரப்பின் விலை இருபத்து ஐந்து இலட்சம் (2,500,000/=)
( தரகர் தேவையில்லை. )
(4629)
குரு : 077 585 8058

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
பிரான்ஸ் / ஜெர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்
1150 /= Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-505)

# மரண அறிவித்தல்



## லோகேஸ்வரன் பிரவீணன்

### ( கபிலன் )

**மாணவன் - யாழ். வயாவிளான் மத்திய கல்லூரி,**
**2018 ஆம் ஆண்டு உயர்தர தொழில்நுட்பப் பிரிவு**

**பிறப்பு : 18.05.1999** **இறப்பு : 11.11.2020**

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லோகேஸ்வரன் பிரவீணன் (கபிலன்) நேற்று (11.11.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.11.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் தெற்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புன்னாலைக்கட்டுவன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-671)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.